விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 184 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 07 சனிக்கிழமை (21.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

புதிய அரசமைப்பின் ஊடாக

# தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு

பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கொழும்பு)

புதிய அரசமைப்பின் ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மாவட்டத்தின் நிரந்தர அரச அதிபராக

மருதலிங்கம் பிரதீபன் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் நிரந்தர அரசாங்க அதிபராக மருதலிங்கம் பிரதீபன் அமைச்ச

15ஆம் பக்கம் பார்க்க

37 வருட கால வரலாற்றில்

## ஊர்காவற்றுறையை இழந்த ஈ.பி.டி.பி

(யாழ்ப்பாணம்)

37 வருட கால வரலாற்றில் இதுவரை

15ஆம் பக்கம் பார்க்க

ஓமந்தை விபத்து

## படுகாயமடைந்த மற்றைய நபரும் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஓமந்தையில் கடந்த மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற டிப்பர் - கார் விபத்தில் படுகாயமடைந்த மற்றைய நபரும் சிகிச்சை பலனின்றி

04ஆம் பக்கம் பார்க்க

## மண்வெட்டியால் தாக்கியதில் குடும்பஸ்தர் பலி

(மல்லாவி)

மல்லாவியில் மண்வெட்டியால் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் மல்லாவி செல்வபுரம் வடக்கு வவுனிக்குளத்

04ஆம் பக்கம் பார்க்க

# செம்மணி மனித புதைகுழிக்கு நீதி கோரி யாழில் போராட்டம்

பெருமளவு பொலிஸார் குவிப்பு




(யாழ்ப்பாணம்)

செம்மணி புதைகுழிக்கு நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் உண்மை கண்டறியப்பட வேண்டும் எனவும் கோரி செம்மணியில் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## வேலணை பிரதேச சபை தமிழரசுக் கட்சி வசம்!

தவிசாளராக அசோக்குமார் ஏகமனதாகத் தெரிவு



(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக சிவலிங்கம் அசோக்குமார் போட்டி

15ஆம் பக்கம் பார்க்க

## வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபையை கைப்பற்றியது இலங்கை தமிழரசுக் கட்சி

தவிசாளராக கந்தையா யசீதன் தெரிவு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக கந்தையா யசீதன் தெரிவாகியுள்ளார்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர்

15ஆம் பக்கம் பார்க்க

## ஈ.பி.டி.பியுடன் இணைய முடியாது

தனது கட்சிக்கு எதிராகவே வாக்களித்த தமிழரசு உறுப்பினர்



(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பியுடன் இணைந்து எம்மால் ஆட்சி அமைக்க முடியாது எனத் தெரிவித்து தனது கட்சி உறுப்பினருக்கு எதிராக வாக்களித்த சம்பவம் ஒன்று ஊர்காவற்றுறைப் பிரதேச சபையில் நேற்று நடைபெற்றது.

ஊர்காவற்றுறை தவிசாளர் தெரிவு நேற்றுக் காலை நடைபெற்றது.

13 உறுப்பினர்களைக்

04ஆம் பக்கம் பார்க்க

திருவுளச்சீட்டு மூலம்

## ஊர்காவற்றுறை பிரதேச சபை முன்னணி வசமானது



தவிசாளராக அன்னராசா தெரிவு

(யாழ்ப்பாணம்)


திருவுளச்சீட்டு மூலம் ஊர்காவற்றுறை பிரதேச சபையைக் கைப்பற்றியது தமிழ்த்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 15 . 06 . 1951

உதிர்வு 23 . 05 . 2025

## அமரர் வல்லிபுரம் தங்கராசா

(தொழில் அதிபர் சைவசமய கிரியைகால வித்துனர், எள்ளங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன்(நாச்சிமார்), பிள்ளையாருக்கான சித்திரத் தேர் அமைவதற்கு உறவுகளுடன் இணைந்த முன்னோடி, முன்னைநாள் தலைவர், பொலிகண்டி தெற்கு வீரபத்திரர் ஆலயம்)

**திதி : தசமி 2025.06.21**

அமரர் வ.தங்கராசா அவர்களின் 31 ம் நாள் நினைவும் அந்தியேட்டி நிகழ்வும் 21.06.2025 இன்று சனிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் முற் பகல் 11.00 மணியளவில் சபிண்டீகரண கிரியைகள், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - மகேஸ்வரி தம்பதியரின் மகனும், அமரர் வேலும்மயிலும் - ஈஸ்வரியம்மா (ஈஸ்வரி அரிசி ஆலை) தம்பதியரின் மருமகனும் விமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், முகுந்தினி, றஜனிகா, றஜிதா, அச்சுதன், அரவிந்தன், அனுஷன், சொர்ணன் ஆகியோரின் தந்தையரும், சிவராசா, பூங்காவனம், நந்தாவனம், செல்வராசா, கதிரமலை, செல்வமலர், அமரர் முருகையா ஆகியோரின் சகோதரனும், அமரர் புஸ்பநாதன், சுதாகர், நிறஞ்சன், கிருஷா, ஜெலிதா ஆகியோரின் மாமனாரும், சொப்ணன், சந்திஷா, நதுஷா, பாவணன், சுஜாத், மகாபிரித்தி, விபுஷன், சுஜாத்தனா, ப்ரீத்தீ, ஜெவினா, அஜின், விகான், அக்ஷிதா, அஸ்விக், அஜீஸ் ஆகியோரின் பேரனும், வசந்தாதேவி, விஜயாதேவி, லிங்கராணி, தயாநிதிதேவி, வதனா, தமயந்தினி, கௌசலா, கல்பனா, நிறஞ்சனா, லிங்கேஸ்வரன், நேசலிங்கம், Dr.வீரரூபன், அமரர் சித்தி, தெய்வேந்திரம், ரவிச்சந்திரன், பாலசுந்தரம், தேன்மதி, தங்கமலர், தயானி ஆகியோரின் மைத்துனரும் மற்றும் அருந்தவராசா, கார்த்திகேசு, சிவநேசன், விவேகானந்தன், குணசுந்தரம், நிசாந்தன், காந்தரூபன், அந்தணன், ஜெகதீசன், அமரர் சாந்திமலர், ஆஷா, பவித்திரா ஆகியோரின் சகலனும் ஆவார்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு பணிவாக வேண்டிக்கொள்கின்றோம்.

கரும்பியோடை
சமரபாகு - வல்வெட்டித்துறை
077 397 6241

(C-3235)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களால் இதுவரை 2000 பேர் பலி!

(கொழும்பு)

**2025ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கையில் வாகன விபத்துகளால் சுமார் 2,000 பேர் உயிரிழந்துள்ளனர்.**

பொலிஸ் போக்குவரத்துப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திக ஹபுகொட இதனைத் தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துகள், வீதிகளுக்கு தகுதியற்றவாகனங்கள் மற்றும் ஒழுங்கற்ற சாரதிகளால் ஏற்படுவதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திக ஹபுகொட சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், கடந்த ஆண்டு (2024) வீதி விபத்துகளால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைத் தவிர, 7,152 பேர் படுகாயமடைந்ததாகத் தெரிவித்தார்.

2025 ஜனவரி 1 முதல் ஜூன் 15 வரையான 6 மாதங்களில், உயிரிழப்புகளை ஏற்படுத்திய 1,133 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. இதில் சுமார் 2 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இது மிகவும் பேரழிவு தரும் சூழ்நிலையாகும். ஒவ்வொரு காலையும் தங்கள் கடமைகளுக்காக வீட்டிலிருந்து பாதுகாப்பாக வெளியேறும் 7 பேரின் உயிரற்ற உடல் மட்டுமே வீடு திரும்புகிறது. 2025 ஜூலை 1 முதல் வாகனங்களில் பொருத்தப்பட்ட தேவையற்ற உதிரி பாகங்கள் கட்டாயமாக அகற்றப்படும் என்று தெரிவித்தார். (நி)

## அலங்கார திருவிழா

(யாழ்ப்பாணம்)

மாதகல் பாணாகவெட்டி கண்ணகை அம்மன் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி பக்தி பூர்வமாக இடம்பெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை கண்ணகி அம்மன் ஊர்வலமாக காலை 8 மணியளவில் ஆலயத்திலிருந்து புறப்பட்டு மாலை 5 மணியளவில் ஆலயத்தை வந்தடைதல் இடம்பெற்று மறுநாள் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி விசேட பூசை, தேர் என்பன இடம்பெறவுள்ளன. தொடர்ந்து மாலை 5 மணிக்கு கண்ணகை அம்மனுக்குப் பொங்கலும் இடம்பெறவுள்ளதென ஆலய ஆதீனகர்த்தா தெரிவித்துள்ளார். (3)

## கதிர்காம பாத யாத்திரைக்கான காட்டுப் பாதை திறப்பு

(அம்பாறை)

ஜூலை 26ஆம் திகதி நடைபெறவுள்ள கதிர்காம முருகன் ஆலயத்தின் கொடியேற்ற விழாவை முன்னிட்டு, பக்தர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை காட்டுப்பாதை வழியாக பாதயாத்திரை மேற்கொண்டு பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

பக்தர்களுக்காக அமைந்துள்ள லகுகலை - உகந்தை வன பாதையின் கதவு, நேற்றுக் காலை 6.00 மணியளவில் உகந்தை முருகன் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாட்டிற்குப் பிறகு திறக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக்க அபேவிக்ரம உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



"ஆரோஹரா" கோஷங்களுடன் பக்தர்கள் தங்களது காட்டுப்பாதை பயணத்தை நேற்று தொடங்கினர். கதிர்காம திருவிழா ஜூலை 26 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பித்து, ஜூலை 11ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

இதேவேளை, நேற்று திறக்கப்பட்ட கதிர்காமம் காட்டுப் பாதை எதிர்வரும் 2025 ஜூலை 4ஆம் திகதி மூடக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## மருத்துவத்துறை மாணவன் வீதி விபத்தில் உயிரிழப்பு

### மட்டக்களப்பில் சம்பவம்

(கல்முனை)

மட்டக்களப்பு கோட்டைக் கல்லாற்றைச் சேர்ந்த மருத்துவத்துறை மாணவனான கனகராசா டர்சாந் என்பவர் கடந்த சில தினங்களுக்கு முன் பெரிய கல்லாறு பாலத்தில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான கனகராசா டர்சாந் ரஷ்யா நாட்டில் தனது மருத்துவக் கல்வியை தொடர்ந்து வந்த நிலையில் சில தினங்களுக்கு முன் நாடு திரும்பினார். அதன் பின் மட்டக்களப்பு பெரிய கல்லாறு வைத்தியசாலையில் பயிற்சி வைத்தியராக இணைந்து கொண்டு கடமை புரிந்து வந்த போது கடமை நிமிர்த்தம் வைத்தியசாலைக்குச் செல்லும் வழியிலேயே பெரிய கல்லாறு பாலத்தில் வைத்து விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்தார். படுகாயத்துக்குள்ளான மருத்துவ மாணவன் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (நி)

## புலமைப் பரிசில் பரீட்சை ஒரேயடியாக நிறுத்தப்படாது!

### பிரதி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை ஒரேயடியாக நிறுத்தப்படாது என்று கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக பிரதி அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார். அதன்படி, 2029 ஆம் ஆண்டு வரை புலமைப்பரிசில் பரீட்சையை மாற்றமின்றி நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

2029 ஆம் ஆண்டுக்குப் பிறகு புலமைப்பரிசில் பரீட்சையை நடத்துவது குறித்து பரிசீலிக்க 2028 ஆம் ஆண்டில் ஒரு குழு நியமிக்க திட்டமிடப்படும் என்றும் பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார். எனினும், பரீட்சையின் அழுத்தத்தைக் குறைப்பதற்கான திட்டத்தை பரீட்சைத் திணைக்களம் தற்போது தயாரித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பாடசாலைகளுக்கு இடையிலான வேறுபாடுகளை முறையாக நீக்கவும், புலமைப்பரிசில் காரணமாக மாணவர்கள் மீதான அழுத்தத்தைக் குறைக்கவும் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி)

ஈழ நல்லூர்

ஸ்ரீதேவி வில்லிசைக்குழு

இயக்குனர் கலைமாமணி, வில்லிசைச் சக்கரவர்த்தி டாக்டர் **சாம்பசிவஸ்ரீ சோமாஸ்கந்த குருஜி** அவர்கள் கனடாவிலிருந்து யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். உங்கள் ஆலய உற்சவங்கள், கலைவிழாக்கள் மற்றும் பொதுநிகழ்வுகளில் பல்சுவை நகைச் சுவையுடன் வில்லுப்பாட்டு நிகழ்வுகளைக் காண அழைத்து மகிழுங்கள்.

21-06-2025 தொடக்கம் 13-07-2025 வரை

தொடர்புகளுக்கு:

(4594)

075 041 0278

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ.பி.டி.பியுடன்...

கொண்ட ஊர்காவற்றுறை பிரதேச சபையில் ஈ.பி.டி.பி 4 உறுப்பினர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணி 3 உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தி 3 உறுப்பினர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சி 2 உறுப்பினர்கள், ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி ஒரு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வரையிலும் தமிழரசுக்கட்சியின் பதில் தலைமைகளால் ஈ.பி.டி.பி ஆட்சியமைக்க ஆதரவு கொடுக்க வேண்டும் என்று தமிழரசின் இரு உறுப்பினர்களுக்கும் கண்டிப்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

ஆனால் இந்த அறிவுறுத்தலுக்கு பணிய முடியாது என்று தமிழரசின் இரு உறுப்பினர்களில் ஒருவரான விடுதலைப்புலிகள் இயக்க முன்னாள் தளபதியான ரஞ்சித் உறுதியாகத் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் நேற்றுக் காலை தமிழரசின் மற்ற உறுப்பினரான யுகன் என்பவரை ஈ.பி.டி.பி தவிசாளராக முன்மொழியும். அதன்படி இணைந்து ஆட்சியமைப்போம் என்று தமிழரசின் பதில் தலைமை தரப்புக்களால் கூறப்பட்டது.

அதற்கு தமிழரசின் மற்ற உறுப்பினரான முன்னாள் தளபதி ரஞ்சித் "நான் இந்த ஈ.பி.டி.பி என்ற தமிழ் இனத்தை காட்டிக்கொடுத்த இனத்துரோகிகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடியவன், என்னால் இனத்துரோகிகளுடன் இணைந்து ஆட்சியமைக்க முடியாது. நீங்கள் என்னைக் கட்சியில் இருந்து நீக்குவது என்றால் நீக்குங்கள்" என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

இந்த நிலையில் காலை தவிசாளர் தெரிவு நடைபெற்றது. தமிழரசு உறுப்பினர் யுகனை ஈ.பி.டி.பி முன்மொழிந்து வழிமொழிந்தது, அன்னராசாவை முன்னணி உறுப்பினர்களே முன்மொழிந்து வழிமொழிந்தார்கள்.

வாக்கெடுப்பில் யுகனிற்கு ஈ.பி.டி.பி இன் 4 வாக்குகளுடன் 5 வாக்குகளும், அன்னராசாவிற்கு தமிழரசின் ரஞ்சித்தின் ஒரு வாக்குடன் 5 வாக்குகளும் கிடைத்தது. இருவருக்கும் சமம் என்பதால் திருவுளச்சீட்டு முறையில் அன்னராசா வெற்றி பெற்றார்.

பின் நடந்த உபதவிசாளர் தெரிவில் முன்னணி உறுப்பினர்கள் தமிழரசின் ரஞ்சித்தை முன்மொழிந்தார்கள். அவர் வெற்றிபெற்றார். (ம-7)

## மண்வெட்டியால் ...

தைச் சேர்ந்த கதிரவேல்பிள்ளை கண்ணதாசன் (வயது - 56) என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த நபர் அனிச்சயன் குளம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருகின்றார்.

இவர் பணிக்குச் செல்வதற்கு முன்னர் கடந்த 10ஆம் திகதி இரவு 7 மணியளவில் தனக்கும் தனது இரண்டு நண்பர்களுக்கும் உணவு வாங்கிக்கொண்டு சென்றுள்ளார்.

மூவரும் உணவருந்திய பின்னர் குறித்த நபருக்கும் அவரது நண்பர்களில் ஒருவருக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டது. இந்நிலையில் அவரது நண்பர் மண்வெட்டியால் குறித்த நபரைத் தாக்கிவிட்டு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

சரணடைந்தவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் குறித்த பகுதிக்குச் சென்ற நட்டாங்கண்டல் பொலிஸார் இரத்த வெள்ளத்தில் மயக்கமடைந்து இருந்த குறித்த நபரை மீட்டு நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

பின்னர் மல்லாவி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று, அதன்பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு சென்று இறுதியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை ஒரு மணியளவில் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,60,104)

## படுகாயமடைந்த ...

நேற்று உயிரிழந்துள்ளார்.

இந்தியாவுக்குத் தல யாத்திரை மேற்கொண்டு விட்டு யாழ்ப்பாணம் நோக்கி கார் ஒன்றில் திரும்பிக் கொண்டிருந்த, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் கலாசார உத்தியோதராகக் கடமை ஆற்றி வந்த சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகர சர்மா சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அதன் பின்னர் அவரது மகனும் உயிரிழந்தார்.

இதில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொழும்பு 15 ஐச் சேர்ந்த துரைச்சாமிக் குருக்கள் சுவாமிநாத ஐயர் (வயது- 69) என்பவர் நேற்று வெள்ளிக்கிழமை (20) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளது. மேலும் பெண் ஒருவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## செம்மணி ...

இதன்போது அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இலங்கை அரசே எம்மிடம் இருந்த வலிந்து அபகரிக்கபட்டு படுகொலை செய்யப்பட்டு மனித புதைகுழிகளில் புதைக்கப்பட்ட எமது அன்புக்குரியோரின் பெறுமதி மிக்க நீதி கோருகின்றோம் எனும் தொனிப்பொருளில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் செம்மணியில் நேற்றுக் காலை 10 மணிமுதல் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நீதி வேண்டும், நீதி வேண்டும் செம்மணி படுகொலைக்கு நீதி வேண்டும், இது மண்ணல்ல புதை உண்மை அதை தோண்டிக் காட்டுவோம், ஐ.நா செவி கொடு ஜனாதிபதி கண்விழி மனித உரிமையைப் பாதுகாப்பீர், புதைகுழிகள் அடைக்கலம் அல்ல உண்மை பேசும் தளங்கள், விசாரணையைத் துரிதப்படுத்து, செம்மணிக்கு ஒரு நீதி பட்டலந்தவுக்கு ஒரு நீதியா? ஆகிய கோஷங்களை எழுப்பிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது பாதிக்கப்பட்ட தரப்பினர், பொதுமக்கள், வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினர், மதகுருத் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து கடமைகளுக்காகவும் செம்மணி புதைகுழியைப் பாதுகாக்கும் முகமாகவும் அதிகளவு பொலிஸார் போராட்டகளத்தில் குவிக்கப்பட்டு இருந்ததை அவதானிக்க முடிந்தது. (ம-7,33)

## தமிழ் மக் ...

அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்குத் தமிழ் மக்களும் ஆணை வழங்கியுள்ளார்கள்.

எமது ஜனாதிபதி மீதும், எமது அரசு மீதும் தமிழ் மக்கள் வைத்த நம்பிக்கையை நாம் வீணடிக்க மாட்டோம்.

வடக்கு, கிழக்குக்கு நாம் விஜயம் செய்யும் ஒவ்வொரு தடவையும் அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளும் எம்முடன் பேசுவார்கள். எனவே அவர்களின் எதிர்பார்ப்பை நாம் நிறைவேற்றியே தீருவோம் என்றார். (ம-7)


# மரண அறிவித்தல்

## திருமதி நாகேந்திரம் ருக்மணி



பிறப்பு 17.11.1941 இறப்பு 20.06.2025

மாவத்தை ஒழுங்கை, சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் ருக்மணி அவர்கள் நேற்று (20.06.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - தெய்வயானை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நாகேந்திரம் (ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும் சொரூபன், திவ்வியரூபன், லிங்கரூபன், உமையாள், கலைமகள் ஆகியோரின் அன்புத் தாயாரும் கௌசல்யா, ஸ்ரீகௌரிக்கா, விக்னகுமார், துஷ்யந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் லக்சாயினி, மதுசாயினி, கிராயினி, கௌரூபன், கௌசாயினி, துவியன், கனிஸ்டன், கரிநிசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆரத்தியாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் (பிப்பிலி) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவத்தை ஒழுங்கை,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 696 7569

(4597)


## இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரை வெல்வது ஐ.பி.எல் கோப்பையை விடப் பெரியது



தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து, நியூஸிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா போன்ற அயலக மண்ணில் டெஸ்ட் தொடரை வெல்வது ஐ.பி.எல் வெற்றியை காட்டிலும் பெரியது என இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் புதிய கப்டனான சுப்மன் கில் கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியா விளையாடுகிறது. இந்தத் தொடரின் முதல் போட்டி நேற்று முதல் லீட்ஸ் நகரில் ஆரம்பமாகியது.

ரோஹித் சர்மா மற்றும் விராட் கோலி ஆகியோர் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுள்ள நிலையில், அவர்கள் இல்லாமல் இந்திய அணி விளையாட உள்ள முதல் டெஸ்ட் போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பத்திரிகையாளர் சந்திப்பில் இந்திய அணியின் கப்டன் சுப்மன் கில் தெரிவித்தாவது. "இங்கிலாந்தில் கப்டனாக அணியை வழிநடத்தும் வாய்ப்பு என்பது ஒரு வீரருக்கு அதிகம் கிடைக்காது. இரண்டு முறை தான் அந்த வாய்ப்புக் கிடைக்கும். ஒரு தலைமுறையின் சிறந்த வீரர் என்றால் மூன்று முறை கூட அணியை தலைமை தாங்கும் வாய்ப்பு கிடைக் கலாம். ஆனால், ஐ.பி.எல் ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும். தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து, நியூஸிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் டெஸ்ட் தொடரை வெல்வது என்பது ஐ.பி.எல் தொடரில் சம்பியன் பட்டத்தை வெல்வதைக் காட்டிலும் அது கௌரவமும் கூட எனத் தெரிவித்தார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதியின்றி பன்றி இறைச்சி எடுத்துச் செல்லத் தடை

## ஆபிரிக்க பன்றிக்காய்ச்சலால் அச்சம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளையும் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் தொற்று பரவக் கூடிய அல்லது அதிக ஆபத்துள்ள பகுதிகளாகக் குறிப்பிட்டு சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.


இந்த வர்த்தமானி அறிவிப்பு விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகம் ஹேமாலி கொத்தலாவல கடந்த 13 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இவ்வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித்தலில் பன்றிகளை அதிக ஆபத்துள்ள விலங்குகளாகவும் குறிப்பிட்டுள்ளது. கடந்த சில மாதங்களில் இலங்கையின் பல்வேறு பிரதேச செயலகங்களில் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் பரவியுள்ளதாகவும் அது மேலும் பரவ வாய்ப்புள்ளது என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பிரதேச கால்நடை அலுவலரால் வழங்கப்பட்ட அனுமதியின்றி, பாதிக்கப்பட்ட அல்லது அதிக ஆபத்துள்ள பகுதிகளுக்குள் அல்லது வெளியே ஆபத்தான பன்றிகள், பன்றி இறைச்சி மற்றும் தொடர்புடைய பொருட்களை கொண்டு செல்வது, அகற்றுவது, எடுத்துச் செல்வது அல்லது அப்புறப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இறைச்சிக்காக பாதிக்கப்பட்ட விலங்குகளை வெட்டுவது அல்லது நேரடி விலங்கு சந்தைகளை இயக்க அதிக ஆபத்துள்ள விலங்குகளைப் பயன்படுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. (நி)

# யானை-மனித மோதல்களால் 388 யானைகள்: 155 மனிதர்கள் உயிரிழப்பு



(கொழும்பு)

நாட்டில் 2024 ஆம் ஆண்டில் யானை - மனித மோதல்களினால் 388 யானைகள் உயிரிழந்துள்ளதுடன், 155 மனித உயிரிழப்புக்களும் பதிவாகியுள்ளதாக சுற்றாடல் அபிவிருத்தி பிரதியமைச்சர் என்டன் ஜயக்கொடி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதன்படி, மனித உயிரிழப்புகளுக்காக கடந்த வருடத்தில் மாத்திரம் 139.5 மில்லியன் ரூபாவும், சொத்துக்கள் இழப்புகளுக்காக 219.13 மில்லியன் ரூபாவும் நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின்போது, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ரத்னசிறி எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் பிரதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (நி)

# புதிய சட்டமியற்றியேனும் ஹெகலிய தண்டிக்கப்பட வேண்டும்


## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

ஹெகலிய ரம்புக்வெல்ல தேசிய குற்றமிழைத்திருக்கின்றார். நடைமுறையிலுள்ள சட்டங்கள் அவருக்கு தண்டனை வழங்குவதற்கு போதாவிட்டால், புதிய சட்டமியற்றியேனும் நீதியை நிலைநாட்ட வேண்டும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அவரது செயற்பாடுகளால் பல உயிர்கள் பறிபோயிருக்கின்றன. மருந்தின் மீதிருந்த நம்பிக்கையால் விசேட வைத்திய நிபுணர்கள் கூட நோயாளர்களுக்கு குறித்த மருந்துகளை வழங்கியிருக்கின்றனர்.



இவர்கள் அனைவரையும் ஏமாற்றும் வகையிலேயே ஹெகலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட குழுவினர் செயற்பட்டிருக்கின்றனர். குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய அவருக்கு விரைவில் உரிய தண்டனை கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் எனத் தெரிவித்தார். (நி)

# அந்நிய நேரடி முதலீடு 90 சதவீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அந்நிய நேரடி முதலீடு 96 மில்லியன் அமெரிக்க டொலர்களால் வெற்றிகரமாக அதிகரித்துள்ளது என்று இலங்கை முதலீட்டு வாரியம் முன்வைத்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்ற இலங்கை முதலீட்டு வாரியத்தின் முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டத்தின் போது இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடும்போது, உள்நாட்டு முதலீடு 21 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளதாகவும், ஏற்றுமதி வருமானம் 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 176 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளதாகவும் இலங்கை முதலீட்டு வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டை விட மொத்தத்தில், 2025 ஆம் ஆண்டில் இதுவரை இலங்கை 4,669 மில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு முதலீட்டை ஈர்த்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

21.06.2025
ஆனி 07, சனிக்கிழமை
ஏகாதசி பின்னிரவு 1.59 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 5.38 மணிவரை

சுப நேரம் 2.54-4.24 மணிவரை
இராகுகாலம் 8.54-10.24 மணிவரை
ஏகாதசி விரதம், உலக யோக தினம்

சந்திராஷ்டமம், உத்தரம், அத்தம்

வளவன்




எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான இலாபம் கிடைக்கலாம், கனவுப் பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், போசன சுகமுண்டு.




உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, குடும்பத்தினரிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




பக்குவமாக பேசி காரியங்களை சாதித்து கொள்வீர்கள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.




முன்கோபமும் அலைச்சலும் அதிகரிக்கும், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் கூடும், ஆரோக்கியம் சீராகும், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள்.




பொது வாழ்வில் புகழ் கூடும், மனக்குழப்பம் அகலும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும், தேக நலன் சீராகும், வழிபாட்டால் நம்பிக்கை கூடும்.




குடும்ப பொறுப்புக்கள் கூடும், பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.




குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்புகளை காண வேண்டிய நாள்.




கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடிய இனிய செய்திகள் வந்து சேரலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.




சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்பாராத தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் கூடும்.

அறிவில்லாதவன் ஆசை சிறகில்லாப் பறவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்மக் கழிவுகளை தரம் பிரிப்பதற்கு விரைவில் புதிய நிலையம்– தவிசாளர் மயூரன்



(யாழ்ப்பாணம்)

**நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் நிலவிவரும் திண்மக் கழிவகற்றல் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக விரைவில் பிறிதொரு இடத்தில் திண்மக் கழிவுகளைத் தரம் பிரிக்கும் நிலையம் அமைக்கப்படும் என நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தெரிவித்தார்.**

நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மிக நீண்ட காலமாகச் செய்யப்பட்டுவந்த திண்மக் கழிவகற்றல் பொறிமுறைக்கு பொருத்தமான இடம் இல்லாத காரணத்தால் தற்போது சிக்கலான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

தற்சமயம் அதற்கான தீர்வாக மாற்றிடமொன்றுக்கு சுற்றுச்சூழல் அதிகார சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலாளர் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளரின் முயற்சியால் இதற்கான அனுமதி தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. இருந்தபோதும் அதற்கான அமைவிடத்தில் தற்போது வேலைகள் நடைபெறுவதன் காரணமாக அது இன்னும் முடிவடையவில்லை.

திண மக்கழிவகற்றல் தரம் பிரிக்கும் பகுதி தற்சமயம் இல்லாத காரணத்தால் மிகப்பெரிய சிரமத்துக்குள்ளாகியுள்ளோம்.

இந்த விடயத்தில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு தேவை. திண்மக் கழிவுகளை தரம் பிரித்து தரும் பட்சத்தில் அதனை அகற்றுவதற்கான வசதிகள் இலகுவாக இருக்கும்.

உங்கள் ஒவ்வொருவரின் கையிலுமே எமது பிரதேசத்தின் தூய்மையும் இருக்கிறது. பிரதேச சபைக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

ஒரிரு வாரங்களாக பெரிய சவாலை எதிர்நோக்கியுள்ளோம். சில வாரங்களில் முழுமையான வினைத்திறனான திண்மக் கழிவகற்றலை கொண்டு செல்வோம் என்பதை உறுதியுடன் கூறுகிறோம்.

காரைக்கால் பகுதி தற்போது திண்மக் கழிவகற்றலை தரம் பிரிக்கும் வேலையை செய்ய முடியாத பிரதேசமாக மாறியுள்ளது. அப்பகுதி மக்களும் எதிர்ப்பு தெரிவிக்கின்றபடியால் தொடர்ச்சியாக அதனைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கான மாற்றிடமாக நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட காரைமுனங்கு இந்து மயானத்துக்கு அருகில் திண்மக் கழிவகற்றல்இடமொன்றை அமைத்து எங்களுக்கு வரவேண்டிய நிதிப்பங்களிப்புடன் முழுமையான வேலை திட்டங்கள் நடக்கிறது. அந்த இடத்தில் அதனைத் திறம்பட செய்வோம் என எதிர்பார்க்கிறோம் என்றார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 300 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 700 | 650 | 600 |
| தக்காளி | 400 | 400 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 220 | 250 |
| கோவா | 500 | 450 | 400 | 400 | 600 |
| கரட் | 700 | 650 | 600 | 650 | 700 |
| பூசணி | 120 | 160 | 160 | 150 | 150 |
| புடோல் | 120 | 150 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 400 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 170 | 150 | 110 | 140 |
| பாகற்காய் | 700 | 600 | 600 | 600 | 800 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 280 | 450 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 350 | 250 |
| லீக்ஸ் | 400 | 400 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 400 | 400 | 400 | 380 | 400 |
| கறிமிளகாய் | 800 | 500 | 700 | 520 | 800 |
| முருங்கைக்காய் | 1400 | 1600 | 1500 | 1300 | 1400 |
| போஞ்சி | 700 | 700 | 700 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 180 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 30-100 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 300 | 350 | 400 | 300 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 160 | 150 | 100-170 | 150-200 |
| இராசவள்ளி | 650 | 600 | 600 | 500 | 650 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 600 | 600 | 500 |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 200 | 200 | 150 | -- | 250 |

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் ஆலய விசேட பொதுக்கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் உப தலைவர் செ.ஜெகதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (3)

(யாழ்ப்பாணம்)

பொதுநூலகத்தின் இந்த ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் நூலகத் தொழில்நுட்ப விரிவுரை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (3)



உலக தாதியர் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்கடமையாற்று மருத்துவர்களுக்கு நெல்லியடி வர்த்தக சங்கத்தின் உப தலைவர் அருண் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான டீ சேட்டுகளை அன்பளிப்பு செய்துள்ளார். அவருக்கு மதிப்பு அளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. (படம்- மகாலிங்கம்)

## இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)

பாட்டரசர் கி.பாரதிதாசனின் பாவலர் பயிலரங்கம் நடத்தும் இலக்கியவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் இரவு எட்டு மணி வரை யாழ்ப்பாணம் 345, கோவில் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் கம்பன் கழகத் தலைவர் பாட்டரசர் கி. பாரதிதாசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி. சிறிசற்குணராசா, புதுவைக் கலைப்பண்பாட்டுத் துறையின் மேனாள் இயக்குநர் வி. கலியபெருமாள், கம்பன் திரைப்பட இயக்குநர் முனைவர் இரவி குணவதிமைந்தன், முனைவர் ஆ. சுசித்ரா, முனைவர் ம.தமிழ்ச்செல்வி, பேராசிரியர் ஆதிரன் மற்றும் மு.அருள்செல்வன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (க-3)



யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலய பரிசளிப்புவிழாவும் "மகாஜனனம்" நூல் வெளியீடும் கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை முதல்வர் பரமநாதன் கமலதாசன் தலைமையில் பாடசாலையின் முத்துலிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி மாநகர சபையை கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி

(

காலி மாநகர சபையின் அதிகாரத்தை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.

காலி மாநகர சபையின் முதல் கூட்டம் நேற்றுக் காலை உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது.

காலி மாநகர சபையின் மேயரைத் தேர்ந்தெடுப்பதற்காக இரகசிய வாக்கெடுப்பு நடத்துவதா? அல்லது பகிரங்க வாக்கெடுப்பு நடத்துவதா? என்பதை முடிவு செய்வதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், இரகசிய வாக்கெடுப்புக்கு ஆதரவாக 19 பேரும், பகிரங்க வாக்கெடுப்புக்கு ஆதரவாக 17 பேரும் வாக்களித்தனர்.

இதற்கமைய பெரும்பான்மையினரின் விருப்பத்தின் அடிப்படையில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டதால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

பின்னர், ஐக்கிய மக்கள் சக்தியின் பல உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்பு செய்து புறக்கணித்த நிலையில், நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸாரும் அழைக்கப்பட்டனர்.

இதன் காரணமாக, சபை 30 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில், தேசிய மக்கள் சக்தி கட்சியின் சுனில் கமகே 19 வாக்குகளைப் பெற்று காலி மாநகர சபையின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (நி)

# இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று முன்தினத்துடன் ஒப்பிடும்போது நேற்று சற்று குறைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி இன்று 296.42 ரூபாவாகவும், 304.77 ரூபாவாகவும் உள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது 296.42 ரூபாவாகவும், 304.77 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது. ஏனைய பல வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராகவும் இலங்கை ரூபாயின் பெறுமதி சரிந்துள்ளது.

அதே நேரத்தில் வளைகுடா நாணயங்களுக்கு எதிராக அதன் பெறுமதி உயர்ந்துள்ளது. (நி)

# விசேட வாகனப் பரிசோதனை
## 44 வாகனங்கள் சேவையிலிருந்து நீக்கம்

(ஹற்றன்)

ஹற்றன் - கண்டி பிரதான வீதியில் நேற்று முன்தினம் விசேட வாகனப் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது தனியார் வாகனங்கள், இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்துகள் உட்பட மொத்தம் 44 வாகனங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் தற்காலிகமாக சேவையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டன.

அதிகப்படியான புகை வெளியேற்றம், இயந்திரக் குறைபாடுகள் அல்லது பிற பாதுகாப்பு அபாயங்களை வெளியிடுவதாகக் கண்டறியப்பட்ட வாகனங்கள், இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்துகள் உள்ளிட்ட வாகனங்களை இவ்வாறு சேவையிலிருந்து நீக்க உத்தர விடப்பட்டன.

இந்த வாகனங்களின் வருடாந்த வருவாய் உரிமங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் பறிமுதல் செய்யப்பட்டன.

நாடு முழுவதும் வீதி பாதுகாப்பு மற்றும் வாகன தரத்தை மேம்படுத் துவதற்கான தொடர்ச்சியான நடவடிக்கையின் ஒரு பகுதியாக, ஏனைய இடங்களிலும் இதே போன்ற நடவடிக்கைகள் தொடரும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின்

வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா அடிப்படை பயிற்சிகள் ஆரம்பம்

| | |
|---|---|
| சக்கரை நோய் – DIABETES | இடுப்பு வலி – BACK PAIN |
| மன உளைச்சல் – TENSION | சைனஸ் – SINUS |
| இரத்த அழுத்தம் – BLOOD PRESSURE | இருதய நோய்கள் – HEART DISEASE |
| ஆஸ்த்துமா – ASTHMA | குழந்தை பேரின்மை – INFERTILITY |
| மூட்டு வலி – JOINT PAIN | மாணவர் கை நடுக்கம் – SHIVERING |

தொடர்ந்து பயிற்சிகள் செய்து வர இவற்றில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமான வாழ்க்கை நம் வசமாகும். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை எளிய முறை யோகா பயிற்சிகளை பெற ஓர் அரிய சந்தர்ப்பம்

அன்பர்களே பங்கேற்று பலனடைவீர ...

இடம் :- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

காலம் :- ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

பயிற்சி வழங்குபவர் :-மனவளக்கலை பேராசிரியர் வா.வள்ளி அவர்கள் (தமிழ்நாடு இந்தியா)

வாழ்க வளமுடன்

தொடர்புகளுக்கு :- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

இல 81, பிறவுன் வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில், யாழ்ப்பாணம்.

தொ.இல :- 076 857 1395, 077 736 8745, 077 891 6407


# பகிடிவதை தொடர்பில் 1997 இற்கு முறையிடலாம்
## குற்றப்புலனாய்வு திணைக்களம்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் 30 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிகளவான முறைப்பாடுகள் சப்ரகமுவ பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் ஒலுவில் பல்கலைக் கழகம் ஆகியவற்றிலிருந்து பதிவாகியுள்ளன.

"இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. குற்றவாளிகள் என கண்டறியப்பட்டால், 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கப்படலாம்" என குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு அளிக்க, 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த அவசர தொலைபேசி இலக்கம் 24 மணிநேரமும் சேவையில் இருக்கும்.

இவ்வாறு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் இரகசியமாக பரிசீலிக்கப்படும் என்பதுடன், உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைகளை ஒழிப்பதற்கும், மாணவர்களை துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகங்களில் இருந்து பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# மிதமிஞ்சிய அளவில் மருந்து மாத்திரைகள்
## பயன்படுத்தும் இலங்கை மக்கள்

(கொழும்பு)

இலங்கை மக்கள் மிதமிஞ்சிய மருந்து மாத்திரைகளை பயன்படுத்துவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையர்கள் உலக தரத்தைவிட மிக அதிக அளவில் மருந்துகளை பயன்படுத்துகின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டில் தற்போது 863 பொதுப்பெயர் மருந்துகள் (gen eric drugs) கொள்வனவு செய்யப்படுவதாகப் பிரதி சுகாதார அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார். அவற்றில் மூன்றில் இரண்டு பாகம் இறக்குமதி செய்யப்பட்டவையாகவும், மற்றவை உள்ளூர் தயாரிப்புகளாகவும், அவசியமில்லாமல் அதிகளவில் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சரியான மருந்தளிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் இல்லாத காரணத்தால் மருந்துகளின் பாவனை மிக அதிகமாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

நமது நாட்டில் 863 மருந்து வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இங்கிலாந்து போன்ற முன்னேறிய நாடுகளில் கூட இதை விட குறைவாகவே மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன" என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மருந்தளிப்பு தொடர்பான நெறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் நவீன நெறிமுறைகள் கொண்டு 450-500 மருந்துப் பிரிவுகளுக்கு இந்த எண்ணிக்கையை குறைக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

மருந்துகளின் எண்ணிக்கை குறைப்பு வருடாந்த மருந்து செலவுகளில் பெரும் சிக்கனத்தை ஏற்படுத்தும் எனவும், அரசு ஆண்டுக்கு 185 பில்லியன் ரூபாவினை மருந்துகளுக்காக ஒதுக்கி வருவதாகத் தெரிவித்துள்ளார். (நி)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

0091956156719

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

077 839 3974

காணி விற்பனைக்கு

நிலாவரைக்கு அண்மையில் 75 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

பிரித்தும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

077 082 1010


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## எமது இலக்கு அலி கமேனியே!
# கதறும் இஸ்ரேல்



(ஜெருசலேம்)

ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் இஸ்ரேலின் சொரோகா வைத்தியசாலை சேதமடைந்ததோடு 89 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலில் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் எங்கள் இலக்கு இஸ்ரேல் இராணுவத்தளம் மற்றும் உளவுப் பிரிவுத் தளம் மட்டுமே.

நாங்கள் நடத்திய தாக்குதலின் அதிர்வலைகளால் ஏற்பட்ட பாதிப்புதான் வைத்தியசாலையில் உணரப்பட்டதே தவிர, எங்களின் இலக்கு வைத்தியசாலை அல்ல என்று ஈரான் தெரிவித்துள்ளது.

உயிருடன் இருக்க அனுமதிக்க முடியாது. ஈரானின் தலைவர் அலி கமேனியை இனி உயிருடன் இருக்க அனுமதிக்க முடியாது என இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் மீதான, ஈரானிய ஏவுகணைத் தாக்குதலின் போது சொரோகா வைத்தியசாலை தாக்கப்பட்ட பின்னரே அவர் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

தெற்கு இஸ்ரேலின் உள்ள முக்கிய சொரோகா வைத்தியசாலை மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரான் பாலிஸ்டிக் ஏவுகணைகளை இஸ்ரேல் நோக்கி ஏவியுள்ளதாக இஸ்ரேலிய பாதுகாப்பு படை அறிவித்துள்ளது. இதன் விளைவாக, இஸ்ரேலின் மையப் பகுதியில் சைரன்கள் ஒலித்த வண்ணம் உள்ளதாக உள்ளது.

இந்நிலையிலேயே சொருரோகா வைத்தியசாலையில் பாலிஸ்டிக் ஏவுகணை வெடித்த பாதிப்புக்கள் மற்றும் மக்கள் பதற்றத்துடன் வெளியேறும் காட்சிகளை இஸ்ரேலிய ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. (நி)

# ஈரான் மீது தாக்கு

# 2 வாரங்களில்

# அமெ



(வோஷி
ஈரான்
வதா?, இல்
2 வாரங்க
முடிவு செய்
மாளிகை அ

இது
மாளி
கரோலி
ஈரானு
பேச்சு
அல்லது
என்ற
உள்ள
நடத்து

## ஈரானுக்கு ஆதரவளிக்கும்
# வடகொரியா

இஸ்ரேலின் தாக்குதலை எதிர்கொண்டுள்ள ஈரானுக்கு வடகொரியா ஆதரவு தெரிவித்துள்ளது.

மத்திய ஆசியாவில் முழுமையான போரின் அபாயத்தை இஸ்ரேல் அதிகரித்து வருவதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக வடகொரியாவின் அரசு ஊடகமான KCNA செய்தி வெளியிட்டுள்ளது.

"இன்று உலகம் காணும் நிகழ்வுகள், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளால் ஆதரிக்கப்பட்டு பாதுகாக்கப்படும் இஸ்ரேல், இஸ்ரேல் மத்திய கிழக்கின் அமைதியை பாதித்த புற்றுநோய் ஈரானுக்கு வடகொரியா ஆதரவு என்பதையும், உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்பை அழிப்பதில் முக்கிய குற்றவாளி என்பதையும் தெளிவாக நிரூபிக்கிறது" என்று அந்த அதிகாரி கூறியதாக KCNA தெரிவித்துள்ளது.

மத்திய ஆசியாவில் ஒரு புதிய போரை கொண்டுவந்த சியோனிஸ்டுகளும், அவர்களை ஆர்வத்துடன் பாதுகாத்து ஆதரிக்கும் பின்கதவு சக்திகளும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை அழிப்பதற்கு முழுப் பொறுப்பாளிகள் என்று அந்த அதிகாரி மேலும் கூறினார்.

ஈரானை போல வடகொரியாவும் அதன் ஆயுதங்கள் மற்றும் அணுசக்தித் திட்டங்கள் காரணமாக அமெரிக்கா மேற்கு நாடுகளால் தொடர்ந்து தடைகளுக்கு இலக்காகி வரும் நாடு என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)



நி
மே
இர
வி
ரஷ்

இ
பரி
ஜ
புத
டா

நே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தல் நடத்துவதா?
# ...ஸ் ட்ரம்ப் முடிவு
# ...ரிக்கா அறிவிப்பு

**(...ஷிங்டன்) ••••••••••••••**
**...ன் மீது தாக்குதல் நடத்து**
**...ல்லையா? என்பது குறித்து**
**...களில் ஜனாதிபதி ட்ரம்ப்**
**...ய்வார் என வெள்ளை**
**... அறிவித்துள்ளது.**

இது குறித்து வெள்ளை
...ளிகை பத்திரிகை செயலாளர்
...ராலின் லீவிட் கூறியதாவது:
...ானுடன் எதிர்காலத்தில்
...ச்சுவார்த்தைகள் நடக்கலாம்
...ல்லது நடக்காமலும் போகலாம்
...ற கணிசமான வாய்ப்பு
...ள்ளது. ஈரான் மீது தாக்குதல்
...த்துவதா?, இல்லையா? என்பது குறித்து 2 வாரங்களில் ஜனாதிபதி ட்ரம்ப் முடிவு செய்வார்.

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதை தடுக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

வலிமையின் மூலம் அமைதியை உருவாக்கும் ஜனாதிபதி. எனவே இராஜதந்திரத்திற்கான வாய்ப்பு இருந்தால் ஜனாதிபதி எப்போதும் அதை பயன்படுத்திக் கொள்வார்.


ஆனால் அவர் பலத்தை பயன்படுத்த பயப்படவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

தெற்கு இஸ்ரேலில் உள்ள சொரோகா மருத்துவமனையை குறிவைத்து. ஈரான் தொடர்ந்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

இதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

அவர், "டெஹ்ரானில் உள்ளவர்கள் கடும் விளைவுகளை சந்திப்பார்கள்" என தெரிவித்தார். (நி)

## வெடித்துச் சிதறிய ஸ்பேஸ் எக்ஸ் ராக்கெட்



ஸ்டார்ஷிப் என்பது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு வரும் ஒரு ராக்கெட் ஆகும்.

ஸ்பேஸ் எக்ஸ் அமெரிக்கப் பணக்காரர் எலான் மஸ்க்கிற்குச் சொந்தமானது.

அமெரிக்காவின் டெக்சாஸில், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார்ஷிப் 36 ராக்கெட் சோதனையின் போது வெடித்துச் சிதறியது. இதனால் அப்பகுதியில் பெரும் தீப்பிழம்பு உருவானது

ஸ்டார்ஷிப் என்பது விண்வெளிப் பயணம் முதல் செயற்கைக்கோள் ஏவுதல் வரை பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு வரும் ஒரு ராக்கெட் ஆகும்.

அமெரிக்கப் பணக்காரர் எலான் மஸ்க்கிற்குச் சொந்தமான ஸ்பேஸ் எக்ஸின் ஸ்டார்ஷிப் ராக்கெட் சோதனை தோல்வியடைவது இது முதல் முறையல்ல. இதற்கு முன்பு பலமுறை ராக்கெட் ஏவுதல் சோதனைகள் தோல்வியடைந்துள்ளன. (நி)

## 975 பேரைத் தூக்கிலிட்ட ஈரான்

(டெஹ்ரான்)

ஈரான் கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவுக்கு, 975 பேருக்கு கடந்த ஆண்டு மரண தண்டனை நிறைவேற்றியிருப்பதாக ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேற்காசிய நாடான ஈரானில் உலகிலேயே அதிக அளவு மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

இதுகுறித்து ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலில், அதன் துணை கமிஷனர் நட அல்நாஸிப் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

ஈரானில் கடந்த 2024 இல் மொத்தம் 975 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. தூக்கிலிடுவதன் வாயிலாக அங்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

போதைப் பொருள் கடத்தலுக்காக 507 பேர் கொலை குற்றங்களுக்காக 419 பேர் பாலியல் குற்றங்களுக்காக 20 பேர் நாட்டின் பாதுகாப்பு தொடர்பான குற்றங்களுக்காக 29 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர். இவர்களில் 31 பேர் பெண்கள்.

என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (நி)

## ஈரானைத் தாக்கத் தயாராகும் அமெரிக்கா
## பேரழிவுக்கு வழிவகுக்கும் என ரஷ்யா எச்சரிக்கை

(மொஸ்கோ)

ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே நிலவும் பதட்டங்களைத் தொடர்ந்து, மோதலில் எந்தவொரு அமெரிக்க இராணுவத் தலையீடும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.

ஈரான் மீதான தாக்குதல்களில் இஸ்ரேலுடன் இணைவது குறித்து பரிசீலித்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த புதன்கிழமை அறிவித்தது பதட்டங்களை அதிகரித்தது.

இந்நிலையில் மொஸ்கோவில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜகரோவா, இந்தக் கடினமான சூழ்நிலைகளில் அமெரிக்க இராணுவத் தலையீட்டைத் தவிர்க்குமாறு வோஷிங்டனை நாங்கள் வலுவாக எச்சரிக்கிறோம்.

இது உண்மையிலேயே எதிர்பாராத எதிர்மறை விளைவுகளைக் கொண்ட மிகவும் ஆபத்தான நடவடிக்கையாக இருக்கும்" என்று கூறினார்.

முன்னதாக, ரஷ்ய துணை வெளியுறவு அமைச்சர் செர்ஜி ரியாப்கோவ் இஸ்ரேலுக்கு அமெரிக்கா நேரடி இராணுவ உதவி வழங்குவதற்கு கடுமையான ஆட்சேபனை தெரிவித்தார்.

ஈரானிய அணுசக்தி நிலையங்கள் மீதான இஸ்ரேலிய தாக்குதல்களால் உலகம் ஒரு பெரிய பேரழிவின் விளிம்பில் உள்ளது என்று ஜகரோவா கவலை தெரிவித்தார்.

2011இல் ஜப்பானின் ஃபுகுஷிமாவில் நடந்த அணுசக்தி விபத்தை குறிப்பிட்ட ஜகரோவா, ஈரானில் உள்ள புஷேர் அணுமின் நிலையத்தின் மீதான இஸ்ரேலிய தாக்குதல் செர்னோபில் பாணி பேரழிவிற்கு வழிவகுக்கும் என்று ரஷ்ய அணுசக்தி தலைவர் எச்சரித்துள்ளார்.

புஷேர் அணுமின் நிலையத்தை ரஷ்யாவே கட்டித் தந்தது குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 85 சீனப் பிரஜைகள் நாடு கடத்தல்




(கொழும்பு)

சைபர் குற்றங்கள் உட்பட பல் வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட மொத்தம் 85 சீனப் பிரஜைகள் நேற்றுக் காலை இலங்கையிலிருந்து சிறப்பு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் நாடு கடத்தப் பட்டுள்ளனர்.

இந்த விடயத்தை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பொறுப்பதிகாரி உறுதிப் படுத்தியுள்ளார்.

இந்த நபர்கள் நாட்டில் வசிக்கும் போது உள்ளூர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு. பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகளுக் குப் பின்னர் காவலில் வைக்கப்பட் டனர்.

உள்ளூர் நீதிமன்றங்களால் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர், அவர்கள் வெலிசரவில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் தடுப்பு மையத் திற்கு மாற்றப்பட்டதுடன், நாடு கடத்தலுக்காகவும் காத்திருந்த னர்.

இந்த நிலையில், ஐந்து பேருந்து களில் கடும் பாதுகாப்பின் கீழ் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட குழுவினர் நேற்றுக் காலை நாடு கடத்தப்பட்ட னர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1979- இந்து
நட்சத்திரம்: ரேவதி
10இல் சூரிசெவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc,MSc,Civil Engineer(London)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/15685

பிறப்பு:1985-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
1இல் சூரிசெவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்-A/L,கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15688

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா: 33 1/4
உயரம்:6'2"
தகைமை/தொழில்:HNDE, Video Editor
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15690

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
உயரம்:5'4"
தகைமை/தொழில் -A/L, SalesManager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15692

பிறப்பு: 1988- இந்து
நட்சத்திரம்:மூலம்
கி-பா-29
உயரம்:5'9"
தகைமை/தொழில்: BBA, Business (own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15694

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி-பா- 6 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Dip in IT, Banker
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15502

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்-மூலம்
7இல் செவ்
கி-பா: 15 1/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: CIMA, Senior Manager(pvt)
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15506

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்-ரோகினி
கி-பா-17
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:Diploma, Teacher
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15664

பிறப்பு-1989 -RC
நட்சத்திரம்-மிருகசீரிடம்
கி-பா-65
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L, Cleark
எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்
தொ.இ: G/15679

பிறப்பு-1993-RC
நட்சத்திரம்-உத்தரம்
உயரம்-5'3"
தகைமை/தொழில்: BFA, DO
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15669

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 400



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அடுத்தவர் மேல்பழி!

எதற்கெடுத்தாலும் அடுத்தவர் மேலே பழி போடுவது இருக்கிறது பாருங்கள். அது மனிதனுக்குக் கைவந்த கலை.

ஒரு பேச்சாளர் இதற்குச் சில வேடிக்கையான உதாரணங்களைச் சுட்டிக்காட்டினார். மனிதன் டிக்கட் வாங்காமல் ரயிலிலே பிரயாணம் செய்கிறான். எப்படிடா வந்தாய் என்றால் "திருட்டு ரயிலிலே" வந்தேன் என்கிறான். பாருங்கள். திருட்டுத்தனம் செய்தது இவன் ரயில்.

திருட்டு ரயிலாம். அதற்குக் கெட்ட பெயர்.

அதே மாதிரித்தான். இவன் காசு அச்சடிக்கிறான். ஆனால் நோட்டுக்குப் பெயர் கள்ளநோட்டு!

சட்ட விரோதமாகக் காய்ச்சுவதும் விற்பதும் இவன். ஆனால் அதற்குப் பெயர் கள்ளச் சாராயம்!

இதுதான் இன்றைய உலகம். இந்தத் தவறுக்கு யார் காரணம் என்று விசாரித்தார்கள். அய்யய்யோ அது நான் இல்லை சார் அவன் தான் என்று காட்டிக் கொடுக்கிறவர்கள் தான் அதிகம்.

அலுவலகங்களிலும் அப்படித்தான் பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்ற மனிதர்கள் அதிகமாயிட்டார்கள்.

ஒரு கதை ஒன்று உண்டு. ஒரு சுவர். அது பாட்டுக்கு நின்றுக் கொண்டிருந்தது. அதிலே ஒருத்தன் கையை வைத்திருக்கிறான்.

அந்த சுவர் பொத்தென்று கீழே விழுந்து விட்டது. "ஏண்டா இந்த சுவரைச் சாய்த்துவிட்டாய் கேட்டிருக்கிறார்கள். " என்று "அய்யய்யோ என்மேலே தவறு இல்லை. சுவர் உறுதியாக இல்லை. அதைக் கட்டிய மேசன் தான் இதற்குக் காரணம்!" என்றான்.

உடனே மேசனைத் தேடிக்கொண்டு போனார்கள். அவரைக் கேட்டார்கள். இதற்கு அவர் சொன்னார் என் மேலே தப்பு இல்லை. சீமெந்தையும் மணலையும் கலந்து கலவை போட்டுக் கொடுத்தவர் தான் காரணம். அவர்தான் கவனக்குறைவான கலவையிலே தண்ணியை அதிகமாக ஊற்றிவிட்டார்" என்றார். உடனே கலவை போட்டவரைத் தேடிக்கொண்டுப் போனார்கள். அவர் சொன்னார். அந்த மண்பானை வாய் அகலமாக இருந்து விட்டது. லேசாக சாய்த்ததும் தண்ணி அதிகமாக கொட்டிப்போனது. அந்தப் பானையைச் செய்தவர்தான் இதற்குக் காரணம்!" எனறார்.

உடனே பானை செய்தவரைத் தேடிக்கொண்டு போனார்கள். அவர் சொன்னார். என் மேலே தவறு இல்லை. நான் அந்தப் பானையை செய்த போது அந்த வழியாக ஒரு நடனம் ஆடும் பெண்மணி போய்க் கொண்டிருந்தார்.

அவர்களைப் பார்த்துக் கொண்டே இந்தப் பானையைச் செய்ததாலே அது இப்படி ஆகிவிட்டுது. அந்த நேரம் அவர்கள் அந்த வழியாகப் போகாமல் இருந்திருந்தால் பானையுடைய வாய் இப்படி அகலமாக போய் இருக்காது என்றார். உடனே அந்த நடனமாது யார் என்று தேடிக்கொண்டு போனார்கள். அந்த அம்மா சொல்லியது.

"ஒரு சலவைத் தொழிலாளியிடம் என்னுடைய துணிகளை வெளுக்கறதுக்காகப் போட்டிருந்தேன். சொன்ன நேரத்திலே அவர் கொண்டுவந்து கொடுக்கவில்லை. எனக்கு அது அவசரமாகத் தேவைப்பட்டது. ஒரு நிகழ்ச்சிக்காக!

அதனாலே நானே அவர் இருக்கிற இடத்துக்குத் தேடிப் போனேன். அதனாலே இந்த வழியாகப் போவது போல ஆயிட்டுது. அவர் துணிமணிகளை கொண்டு வந்து கொடுத்திருந்தால் நான் இந்த வழியாக வந்திருக்க வேண்டிய அவசியமே இருந்திருக்காது!" என்றார்.

உடனே சலவைத் தொழிலாளியைத் தேடிக்கொண்டு போனார்கள்!

"ஐயா நான் வழக்கமாக ஆற்றிலே துணி துவைக்கின்ற கல்லிலே ஒரு சாமியார் உட்காந்திருந்தார். கண்ணை மூடிக்கொண்டு தவம் செய்து கொண்டிருந்தார். அவருடைய தவத்தைக் கலைப்பதற்கு எனக்கு மனம் வரவில்லை. அதுதான் பேசாமல் இருந்து விட்டேன்!" என்றார்.

உடனே எல்லோரும் சாமியாரிடம் போனார்கள். அவர் இன்னமும் தவத்திலேயே இருக்கிறார்? அன்றைக்கு அவர் மௌனவிரதம். எதுவும் பேசமாட்டார். அவர்கள் இவரிடம் போய் நின்று, "ஏன் சாமியாரே அந்தச் சுவர் விழுந்ததிற்கு நீங்கள் தான் காரணமா?" என்று கேட்டார்கள். அவர் மௌனமாக இருந்தார்.

"மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி. இவர் தான் குற்றவாளி. என்றான் ஒருத்தன். போடுங்கடா தலையிலே!" என்றான் இன்னொருத்தன். உடனே போட்டார்கள் ஒரு போடு - அவர் தலையிலே. அவர் பொத்தென்று மௌனமாவே கீழே சாய்ந்து விட்டார் அந்தச் சுவர் மாதிரியே!

பாருங்கள் சார். சில சமயம் மௌனமாக இருப்பதுகூட ஆபத்தாக வந்து முடியும் போல இருக்கிறது! சில சமயம் அது சௌகரியமாக்கூட இருக்கும்! ஒரு சங்கீத வித்துவான் சொன்னார்.

சார். இன்றைக்கு சபையிலே எனக்குத்தான் ஜனங்கள் அதிகமாக கைத்தட்டினார்கள்! என்றார்.

எவ்வளவு நேரம் பாடினீங்க? என்று கேட்டேன்.

"நான் மேடையிலே ஏறி ஜனங்களைப் பார்த்து இன்றைக்கு நான் பாடப்போவதில்லை. மௌன விரதம் இருக்கலாம் என்று நினைக்கிறேன் என்றேன் சார். அவ்வளவுதான் ஜனங்கள் எவ்வளவு சந்தோசப்பட்டார்கள் தெரியுமா?" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்திடம் உள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்

## தவிசாளர் வேளமாலிகிதன்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி நகரினை அபிவிருத்தி செய்வதற்கு இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ள காணிகள் கட்டடங்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேளமாலிகிதன் கோரிக்கை விடுத்துள்ளார்.**



கரைச்சி பிரதேச சபையின் தவிசாளராக பதவியை பொறுபேற்றுக்கொண்ட தவிசாளர் வேளமாலிகிதன் தலைமையிலான உப தவிசாளர் உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமை வடக்குமாகாண ஆளுநரை யாழ்ப்பாண அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த சந்திப்பு தொடர்பில் தவிசாளர் தெரிவிக்கையில், கரைச்சி பிரதேச சபையானது கிளிநொச்சி நகரத்தை கொண்ட பிரதேசமாக இருப்பதால் அதனை உள்ளடக்கிய வகையில் பல்வேறு அபிவிருத்திகளை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

குறிப்பாக கிளிநொச்சி சுற்று வட்ட பாதை புனரமைக்கப்படவேண்டும். குறித்த காணிப் பகுதி இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ளது இதனை விடுவித்து பாடசாலை மாணவர்களுக்கான பாதையை சீர் செய்ய வேண்டும்.

கிளிநொச்சி பொது நூலக கட்டுமானங்கள் முடிவுறுத்தப்படவேண்டும். இதற்கான மேலதிக நிதி தேடல் மற்றும் இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள கட்டடங்களை விடுவித்தல் தொடர்பிலும் ஆளுநருடன் கலந்துரையாடியதுடன் எமது பிரதேச சபையில் ஆளணிகள் நிரப்பப்பட வேண்டியுள்ளது. அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கு குறைவானவர்களே கடமையில் உள்ளார்கள் குறிப்பாக 138 பேர் அனுமதிக்கப்பட்ட ஆளணியாக இருந்தும் தற்போது 78 பேரே கடமையில் இருக்கின்றார்கள்.

இவை தொடர்பிலும் மேலும் கடந்த காலத்தில் 15 வீதிகள் அமைப்பதற்கு அனுமதி கிடைத்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு கிரவல்கள் போட்டு நிறைவு செய்த நிலையில் அவை முழுமைப்படுத்தப்படாத நிலையில் அவை நிறுத்தப் பட்டுள்ளன.

தற்போது வீதி புனரமைப்பிற்காக புதிதாக 15 வீதிகளுக்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. இவை தொடர்பில் ஏற்கனவே செப்பனிடப்பட்ட வேலைகளை செய்து முடிப்பதற்கான அனுமதி மற்றும் அதன் சாதக ,பாதக நிலைமைகள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளோம். இதனை விரிவாக கேட்டறிந்த வடக்கு மாகாண ஆளுநர் உரிய திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு சாதகமான விடயங்களை விரைவுபடுத்துவோம் என்றார்.(8)

# மருதமடு திருப்பதியின் திருவிழா ஏற்பாடுகள் பூர்த்தி

(மன்னார்)

மன்னார் மருதமடு திருப் பதியின் ஆடிமாத திருவிழா வையொட்டி முன்னாயத்த கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை கிறிஸ்து நேசரத்தினம் அடிகளார், மடுத் திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், அருட்தந்தையர்கள், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், இராணுவம், பொலிஸ்,கடற்படை உயர் அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர்.

மன்னார் மருதமடு திருப்பதியின் ஆடிமாத திருவிழாவுக்கான கொடியேற்றம் இம்மாதம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடி மாதம் 2ஆம் திகதி திருவிழா திருப்பலியுடன் நிறைவடையவுள்ள நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக் கணக்கான மக்கள் வருகை தர உள்ள நிலையில் மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு 400 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் வருகை தரும் மக்களின் நலனை கருத்தில் கொண்டு சுகாதாரம், குடிநீர், போக்குவரத்து, மருத்துவ வசதிகள், உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. (8-285)

# நாவல் மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனார் மயில்வானபுரம் பகுதியில் சட்ட விரோத மரக்கடத்தலில் ஈடுபட்ட நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மயில்வானபுரம் அரச காட்டுப்பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் பெறுமதிமிக்க பன்னிரண்டு நாவல் மரக் குற்றிகள் கப்ரக வாகனம் மூலம் கடத்திச்செல்லப்படுவதாக தர்மபுரம் பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப்பெற்றது.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக விசுவமடு பகுதியில் வீதி சோதனையின் மூலம் மரக்குற்றிகளை ஏற்றிப் பயணித்த கப்ரக வாகனம் கைப்பற்றப்பட்டதுடன் சாரதியும் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-316)

# சர்வதேச ரோல் பந்துப் போட்டி கிளி.மத்தி மாணவர்கள் பங்கேற்பு



(தருமபுரம்)

கென்யா நாட்டின் தலைநகர் நைரோபியில் நடைபெறவுள்ள சர்வதேச ரோல் பந்து போட்டியில் இலங்கை அணியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்கள் நான்கு பேர் இடம் பிடித்துள்ளனர்.

இவர்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வு நேற்றுக் காலை கல்லூரியின் முதல்வர் சவரி பூலோக ராஜா தலைமையில் நடைபெற்றது. சர்வதேச ரோல் பந்து போட்டி கென்யா நாட்டின் தலைநகர் நைரோபியில் எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ([illegible])



வவுனியா மாநகர முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோர் கடந்த 18 ஆம் திகதி தமது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றனர். (படம்:- வசந்தரூபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால்நடை வளர்ப்பு – பகுதி 2

# கறவை மாடுகளின் இனப்பெருக்கப் பிரச்சினைகளைக் களைதல்



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

கறவை மாடுகள் சினை பிடிக்காமைக்கும் ஏனைய இனப்பெருக்கம் சார்ந்த பிரச்சினைகளுக்கும் வெப்ப அயர்ச்சி (Heat stress) மிக முக்கியமான ஒரு காரணியாகும். அண்மைக் காலங்களில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் முன்பு இருந்ததை விட அதிக வெப்பநிலை நிலவுகிறது. உலக வெப்பமுறல் (Global warming) இதற்குப் பிரதான காரணியாகும். மனிதர்களைப் போல கறவை மாடுகளுக்கும் உலக வெப்பமுறலால் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. குறிப்பாக கருவுறுதல் தொடர்பான ஓமோன்களின் செயற்பாட்டைப் பாதித்து, கருச்சிதைவை/ கருத்தங்காமையை ஏற்படுத்துகிறது. இதனால் மாடுகளை வெப்பத் தாக்கத்திலிருந்து பாதுகாத்தல் அவசியமாகிறது.

வெப்ப காலங்களில் மதிய நேரங்களில் கறவை மாடுகளை மேய்ச்சலுக்கு விடுவதை தவிர்க்கலாம். பாதிப்பைத் தவிர்க்க, பொருத்தமான கொட்டகைகளை அமைக்கலாம். அதிக வெப்பத்தைத் தாங்கக்கூடிய கால்நடைகளை வளர்க்கலாம். மாடுகளுக்கு எப்போதும் தண்ணீர் கிடைக்கச் செய்வதுடன் அடிக்கடி அவற்றை குளிப்பாட்டலாம். கொட்டகைகளை வெப்பம் தாக்காத வகையில் அமைக்கலாம் (விசிறிகள், குளிர்மையான கூரைகள், மரங்களை அமைத்தல்). இலங்கையின் இனப்பெருக்கக் கொள்கைக்கு (Breeding policy) அமைவாகவே மாடுகளை வளர்க்க பண்ணையாளர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும். உலர் வலயத்தில் வறட்சியை தாங்கும் இந்திய, உள்ளூர்க் கலப்பு மற்றும் குளிர்ப் பகுதிகளில் ஐரோப்பியக் கலப்பு மாடுகளையும் பரிந்துரைக்க வேண்டும். இதன் மூலம் கால நிலையால் தோன்றும் இனப் பெருக்கப் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும்.

இலங்கையின் மாடுகளுக்கு தேவையான சமச்சீர் உணவு (Balanced nutrition) கிடைப்பதில்லை. நெற்பயிர்க் காலங்களில், மாடுகள் மேய இடமின்றி அடைத்து வைக்கப்படுகின்றன. பொதுவாக பயிர் செய்யப்படாத வயல்களிலும் நீர் குறைந்த குளங்களிலும் வளரும் புற்களே அவற்றின் பிரதான உணவாகும். இவை தடைப்படும் காலங்களில் மாடுகளுக்கு உணவு கிடைப்பதில்லை. இதனால் பண்ணையாளர்கள் மேய்ச்சல் நிலங்களைத் தேடிச் சிரமப்படுவதைக் காண முடிகிறது. பலர் மாடு வளர்ப்பையே கை விடுகின்ற நிலை தோன்றுகிறது. உணவுப் பற்றாக் குறையைப் போக்க ஊட்டச்சத்து மிக்க தீவனப் புற்களை வளர்க்கலாம். பொருத்தமற்ற காலத்துக்கும் கிடைக்கத் தக்கவாறு silage புற்களைச் செய்யலாம். நவீன TMR உணவூட்டலைச் செய்யலாம் (பசுந் தீவனம் மற்றும் அடர்தீவனத்தைக் கலந்து வழங்கும் முறை). புற்கள் விரயமாகாமல் புல் வெட்டும் இயந்திரம் மூலம் புற்களை வெட்டி வழங்கலாம். அசோலா பாசியை வழங்கலாம். இவை அனைத்தும் அரச மற்றும் தனியார் அமைப்புகளால் பண்ணையாளர்களுக்கு மானிய முறையில் வழங்கப்படுகின்ற போதும் பெருமளவில் நிலைத்து நிற்பதில்லை. (sustainable). ஒரு சில பண்ணையாளர்களைத் தவிர ஏனையோர் இந்த முறைகளைச் சிறிது காலத்தில் கை விடுகின்றனர்.

இலங்கையின் மாடுகள் அதிகளவில் ஊட்டச்சத்துக் குறைவை (vitamins and minerals) கொண்டிருப்பவை. அடைத்து வளர்க்கும் [intensive] முறை தவிர்ந்த ஏனைய முறைகளில் தேவையான சத்துக்கள் கிடைப்பதில்லை. இனப்பெருக்கத்துக்கு அவசியமான ஊட்டச் சத்துக்களை வெளியிலிருந்தே வழங்க வேண்டும். கனியுப்புக் கலவைகள் சந்தையில் கிடைப்பதால் பொருத்தமானதை கால்நடை வைத்தியரின் பரிந்துரையில் வழங்கலாம். மேலும், குடற்புழுத் தாக்கமும் சத்துக்களின் இழப்புக்கான முக்கிய காரணமாக அமைவதால் குடற்புழு நீக்க மருந்துகளை கால்நடை வைத்தியர் பரிந்துரையில் வழங்கலாம்.மருந்துகளின் விலை அதிகமென்பதால் பல பண்ணையாளர்கள் அவற்றைத் தொடர்ச்சியாக வழங்குவதில்லை. அரசாங்கத்தால், மேற்கூறிய ஊட்டச்சத்து கலவைகள் போன்றவற்றுடன் குடற்புழு நீக்க மருந்துகளும் குறித்த அளவில் வருடாந்தம் வழங்கப்படுகின்ற போதும் அது பண்ணையாளருக்குப் போதியதாக இருப்பதில்லை. எனவே அவற்றின் அளவை அதிகரிக்கலாம்.. இதனை அரச சார்பற்ற நிறுவனங்களும் செய்ய முடியும்.



இலங்கையில் காணப்படும் மாடுகளில் கணிசமானவை தற்காலிக அல்லது நிரந்தர மலட்டுத் தன்மை யானவை அவற்றுக்கு பொருத்தமான சிகிச்சையைச் செய்ய வேண்டும் அல்லது பண்ணையிலிருந்து அகற்ற வேண்டும்.அண்மைக் காலத்தில் பல நவீன சிகிச்சை முறைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. கால்நடை வைத்தியர்களால் நடத்தப்படும் சினை ஒருங்கிணைத்தல் (Oestrus synchronisation) எனும் ஓமோன் சிகிச்சை, தற்காலிக மலட்டுத் தன்மையை நீக்குகின்றன. எனினும் ஓமோன்களின் விலை அதிகம் என்பது ஒரு குறைபாடே. அரசாங்க அலுவலகங்களால் சில வேளைகளில் இலவசமான ஓமோன்கள் வழங்கப்பட்டு குறித்தளவான கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்படுகின்ற போதும் அது போதுமானதாக இல்லை. அத்துடன் ஓமோன் மூலமான சிகிச்சையின் செலவு மற்றும் நீண்ட காலத் தன்மை காரணமாக பல பண்ணையாளர்கள் இதனை மாடுகளுக்குச் செய்வதில்லை. தமது கால்நடைகள் நீண்ட நாட்கள் உற்பத்தியற்று இருக்கும் செலவுடன் ஒப்பிடும் போது மேற்படி சிகிச்சையின் செலவு குறைவானதே. மேலும் அரச மற்றும் தனியார் அமைப்புகள் அடிக்கடி மலடு நீக்கச் சிகிச்சை முகாம்களை (infertility clinics) கிராமங்கள் தோறும் செய்யும் போது விழிப்புணர்வு ஏற்படுவதுடன், கால்நடைகள் உற்பத்தியுடையதாகவும் மாற்றமடையும்.

பல பண்ணையாளர்கள் தங்களது கறவைப் பசுக்கள் சினைப்பட்டிருக்கிறதா இல்லையா என்று அறியாது பண்ணைகளில் வைத்திருந்து நட்டப்படுகின்றனர். கால்நடை வைத்தியர்களால் சினைப் பரிசோதனைச் (pregnancy diagnosis) செய்து அடுத்த கட்ட நடவடிக்கைக்குத் தயாராக வேண்டும். சினைப்படுத்தப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் சினை நிலையை அறிய வேண்டும்.

இலங்கையில் தனியார் செயற்கை சினைப்படுத்துநர்களே அதிகளவில் மாடுகளைச் சினைப்படுத்துகின்றனர். அரச சினைப்படுத்துநர்களின் அளவு குறைவடைந்து போகிறது. மேலும் சினைப்படுத்துநர்களின் வெற்றி வீதமும் (success rate) குறைவாகவே உள்ளது. அலுவலக நேரம் தவிர்ந்த நேரங்களில் வரும் சினைப் படுத்த வேண்டிய சூழ்நிலைகள் தட்டிக் கழிக்கப்படுகின்றன. பண்ணையாளர்களும் சினைப் பருவ அறிகுறிகளைச் சரிவரக் கவனிக்காமல் தவற விடுகின்றனர். இதனைத் தடுக்க, முறையான பொறிமுறைகள் உருவாக வேண்டும். குறைந்தளவு எண்ணிக்கையிலான பண்ணைகள் வரும்படியாக செயற்கைமுறைச் சினைப்படுத்துநர்களின் எல்லைகள் வகுக்கப்பட வேண்டும். பொருத்தமான சம்பளத்துடனும் மேற்பார்வைக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டும் அவர்கள் உள்ளீர்க்கப்பட வேண்டும். இது அரச துறையாகவோ தனியாரா கவோ கூட்டுறவாகவோ அமையலாம். சினைப்படுத்தும் விபரங்களை சினைப்படுத்துநருக்கு அறிவிப்பதை பயிற்சிகளினூடாகப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். குறிப்பாக Uber, Pickme போன்ற பயண மற்றும் உணவு விநியோக முறைகளைப் போல் ஒரு நவீன தகவல் முறையை உருவாக்கலாம்.

மேலும், செயற்கை முறைச் சினைப்படுத்தலைச் செய்ய முடியாத பண்ணைகளுக்கு நல்லினக் காளைகள் வேண்டும். தேவைப்படின் காளை வகைகளை வெளிநாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்யலாம். இலங்கையில் பரவலாக, உள்முக இனக்கலப்பு (inbreeding) நிகழ்ந்து நெருங்கிய தொடர்புடைய காளைகளே பரவலாகப் பாவிக்கப்படுகின்றன. இதனால் மரபு ரீதியான (genetic disorders) குறைபாடுகள் தோன்றுகின்றன. வெளிநாட்டுக் காளைகளில் இருந்து விந்தணுக்கள் பெறப்படும் போதோ, வெளிநாட்டுக் காளைகளை நேரடியாகப் பாவிக்கும் போதோ, அவற்றின் பரம்பரை விபரங்கள் (progeny testing details) காட்சிப்படுத்தப்படுகின்றன. ஆய்வுகூடங்களில் அடிக்கடி பரிசோதிக்கப்படுகின்றன. இந்த மாதிரி ஆய்வுகூடங்கள் இலங்கையிலும் அமைக்கப்பட வேண்டும்.

கால்வாய்நோய், புருசலோசிஸ் போன்ற நோய்களுக்குரிய தடுப்பூசிகளும் முற்றுமுழுதாக வழங்கப்படுவதில்லை என்பதுடன் கணிசமான தடுப்பூசிகள் இந்தியா போன்ற நாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. மேற்படி நோய்களுக்குரிய இலங்கைசார் ஆய்வுகள் குறைவாகவே மேற்கொள்ளப்படுகின்றன. பொருத்தமான ஆய்வுகளையும் தடுப்பூசி உற்பத்திகளையும் இலங்கைச் சூழலுக்கு ஏற்ப உற்பத்தி செய்யும் வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# பிரசவ வேதனை போல சபைகளில் அமைந்த ஆட்சி

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் நோக்கமே தவிடுபொடியாகிப் போயிற்று.

ஆம், வட மாகாணத்தில் யாழ்.மாவட்டத்துக்கு உட்பட்ட பிரதேச, நகர, பட்டின, மாநகர சபைகளில் ஆட்சியை அமைப்பது மற்றும் தவிசாளர், உப தவிசாளர் ஆகியோரைத் தெரிவு செய்வது வரையில் போதுமென்றாயிற்று.

ஆம், பெரும்பான்மைப் பலத்தை எவரும் பெற்றுக் கொள்ளாத காரணத்தால், எதிர்த்துப் போட்டியிட்டு சில இடங்களில் வெற்றி பெற்றவர்களின் ஆதரவைப் பெற வேண்டிய நிலை முதன்மைக் கட்சிகளுக்கு ஏற்பட்டிருந்தது.

ஏலவே, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி யுடன் இணைந்து உடன்படிக்கை செய்து கொண்டது.

அதன் நிமித்தம் சில சபைகளில் ஆட்சிய மைக்கக்கூடிய வாய்ப்பு இரு தரப்புக்கும் ஏற்பட்டிருந்தது.

அதேபோல இலங்கைத் தமிழரசுக் கட்சி நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியுடன் இணைந்து உடன்படிக்கை செய்து குறிப்பிட்ட சபைகளில் ஆட்சியைப் பிடித்துக் கொண்டது.

இதற்கும் அப்பால், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நேரில் சந்தித்து ஆதரவு கேட்டதன் பிரகாரம் எழுதா யாப்பின் அடிப்படையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

ஏதோ ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு திருமணத்தை நடத்தி வைப்பது போல, யாரோடேனும் உடன்படிக்கை செய்து ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற நாடகம் ஒரு மாதிரியாக அரங்கேறியுள்ளது.

இதனைப் பார்க்கும்போது பாராளுமன்றத் தேர்தல் பரவாயில்லைபோல் தெரிகிறது.

ஆம், உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்குத் தமிழ்க் கட்சிகள் பட்ட பாடு போதுமென்றாயிற்று.

இத்தகைய நிலைமை ஏற்படுவதற்கு மூல காரணம் தமிழ் அரசியல் கட்சிகள் மீது தமிழ் மக்கள் கொண்ட நம்பிக்கையீனமே.

இதன் காரணமாக தமிழ் மக்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பரவலாக வாக்கை அளிக்க, முதன்மை வாய்ந்த தமிழ் அரசியல் கட்சிகளால் தனித்து ஆட்சி அமைக்க முடியாமல் போயிற்று.

எனினும் ஆட்சி அமையட்டும். நாம் எதிர்க்கட்சி வரிசையில் இருப்போம் என்ற முடிவை எடுப்பதற்கும் உரியவர்களுக்கு மனமில்லை. இதனால் கூட்டுச் சேர்கின்ற முடிவு எட்டப்பட்டது.

இப்போது இருப்பிலிருந்து தேர் இழுக்கப்படுகிறது. தேர் இருப்புக்கு வரும்வரையில் சறுக்குக் கட்டைகள் தேர்ச்சில்லுக்குக் குறுக்காக விழக்கூடிய சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு என்பதை ஆட்சி அமைத்தவர்கள் சதா நினைத்துக்கொள்ள வேண்டும்.

# முல்லைக்கடலில் மாயமான மீனவர் விசமிகளால் படுகொலை செய்யப்பட்டாரா?

## வலுக்கிறது சந்தேகம்; பொலிஸார் தீவிர விசாரணை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தீர்த்தக்கரைப் பகுதியிலிருந்து கடந்த புதன்கிழமை இரவு கடற்தொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமற்போன மூன்று பிள்ளைகளின் தந்தையான வின்சன்டிபோல் அன்ரனி கருணல் (வயது - 63) என்ற மீனவரினைத் தேடும் பணிகள் இரண்டாவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

சுமார் 30 படகுகள் இணைந்து மேற்கொண்ட இத்தேடுதலில் மீனவரது வலை கடலில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரத்தக்கறையுடன் அவர் பயணித்த படகு மீனவர்களினால் மீட்கப்பட்ட நிலையில் குறித்த படகினை நேற்று கிளிநொச்சி தடையவியல் பொலிஸார் ஆய்வுக்குட்படுத்தினர். இவ்வாய்வில் படகில் இருந்த இரத்தக்கறை மனித இரத்தம் என உறுதியாகியுள்ளது.

தென்பகுதியில் இருந்து வந்து முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் பிரிவினர் முல்லைத்தீவு மீனவர்களுடன் தொடர்ச்சியாக முரண்பட்டு வந்துள்ளனர்.

அண்மையிலும் சட்டவிரோத மீன்பிடிப்படகுகள் ஆறினை முல்லைத்தீவு மீனவர்கள் கடற்றொழில் திணைக்களம், கடற்படையின் உதவிகள் கிடைக்காத சூழ்நிலையிலும் தனித்து நின்று கைப்பற்றி முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

இப்பின்னணியில் குறித்த மீனவர் சட்டவிரோத மீன்பிடியாளர்களால் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் மீனவர்கள் மத்தியில் வலுப்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,299,281)

### புலம்பெயர்வு உயர்வு; பிறப்பு வீதம் சரிவு

# வடக்கில் கேள்விக்குறியாகும் தமிழர்களின் இருப்பு

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாக மாறியுள்ளதாக அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் இது குறித்து மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் வாழ முடியாது என்ற மனோநிலை எமது இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இதனால் கல்வி மற்றும் வேலைகளுக்காக வெளிநாடு செல்ல வேண்டும் என்ற நிலையில் உள்ளனர். மறுபுறத்தில் பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. 1981 காலப்பகுதியில் 8 இலட்சத்துக்கு மேல் இருந்த யாழ்.மாவட்ட சனத்தொகை தற்போது 6 இலட்சம் வரைதான் உள்ளது. முன்னர் 11 எம்.பிக்கள் இருந்த யாழ்.மாவட்டத்தில் இன்று ஆறு எம்.பிக்களே தெரிவாகின்றனர். அடுத்த தேர்தலின் போது இது மேலும் குறைவடையக்கூடும். ஏனெனில் புலம்பெயர்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றார். (ம-7)

# தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்கு போதைவஸ்து

## விசாரணைகள் தீவிரம்

(நாகபட்டினம்)

தமிழ்நாட்டின் சில பகுதிகளிலிருந்து இலங்கைக்குத் தொடர்ச்சியாகப் போதைப்பொருள் கடத்தப்பட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய போதைப்பொருள் தடுப்புப் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தமிழ்நாட்டின் நாகை மாவட்டத்தில் இருந்து அரசியல் பிரமுகர் ஒருவரது செல்வாக்குடன் அதிகளவுப் போதைப்பொருள் கடத்தல் இடம்பெற்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகக் குறித்த பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆண்டு முதல் இக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றிக்கக்கூடும் என சந்தேகிக்கப்படும் நிலையில் மேலதிக விசாரணைகள் போதைப்பொருள்தடுப்புப் பணியகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

# பிரபல கார்ட்டூனிஸ்ட் மூர்த்தி காலமானார்

(யாழ்ப்பாணம்)

பிரபல தமிழ் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் நீண்ட காலமாக கருத்தோவியராகப் பணியாற்றிய கார்ட்டூனிஸ்ட் மூர்த்தி என அழைக்கப்படும் அம்மையப்பபிள்ளை யோகமூர்த்தி உடல் நலக்குறைவு காரணமாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலமானார்.

இதுவரை சுமார் 5 ஆயிரம் அரசியல் கேலிச் சித்திரங்கள் இவரது கைவண்ணத்தில் உருப்பெற்றுள்ளன. அது தவிர கருத்தோவியங்கள், நகைச்சுவைத் துணுக்குகள் படைப்பதிலும் இவர் கைதேர்ந்தவராகத் திகழ்ந்தார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை லங்கா மலர்ச்சாலையில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள நிலையில் இறுதிக்கிரியைகள் இன்று இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# காலாவதியான பொருட்களை விற்பனை செய்தவருக்குத் தண்டம்

முல்லைத்தீவு - உடையார்கட்டுப் பகுதியில், சுகாதார விதிமுறைகளை மீறி காலாவதியான மற்றும் சீர்கெட்டுள்ள உணவுப் பொருட்கள் விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு ரூபா. 40 ஆயிரம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குச் சேர்ந்த பொது சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று வெள்ளிக்கிழமை (20) புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் மற்றும் உடையார்கட்டுப் பகுதிகளிலுள்ள பிரபல விற்பனை நிலையங்களில் திடீர் சோதனைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது விற்பனை நிலையமொன்றில் காலாவதியான உணவுப் பொருட்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமை என்பன இனங்காணப்பட்டது.

இவை தொடர்பாக, உடையார்கட்டு பொது சுகாதாரப் பரிசோதகர் பிரதாஸ் மற்றும் வள்ளிபுனம் சுகாதார பரிசோதகர் றொய்ஸ்ரன் ஜோய் ஆகியோர் இணைந்து மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

உடனடியாகக் குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம், விற்பனை நிலைய உரிமையாளரைக் கடுமையாக எச்சரித்ததோடு ரூபா. 40ஆயிரம் தண்டமும் விதித்துத் தீர்ப்பளித்தது. (ம-7)

# மைதீட்டிய ஏவுகணை ஒன்று கவிதை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பிரியநிலாவின் கவிவண்ணத்தில் உருவான "மை தீட்டிய ஏவுகணை ஒன்று" கவிதை நூலின் வெளியீட்டு விழாவானது எதிர்வரும் 29.06.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்.களரியின் ஆசிரியர் ஜோர்ச் ஜெஸ்ரின் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில்,

பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் வேல் நந்தகுமார் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைநகர் களபூமி திக்கரை முருகனுக்கு 21.06.2025 இன்று 6 ஆம் திருவிழா



திருவிழா தினம் - 2025 ஆம் ஆண்டு நம்முடைய அச்சத்தைப் போக்க பயன் தரும் கந்தர் அலங்காரம் 101 ஆவது பாடலில் கி-வ-ஜ கந்தநாதன் தனது சொற்பொழிவில் தந்துள்ளார். பிறருக்கு அச்சத்தை உண்டாக்கும் எதுவும் **முருகனடியார்களுக்கு அச்சம் விளைவிக்க முடியாது** எனவும் கருத்தாகத் தந்துள்ளார். இது ஓர் பயனுள்ள நூலாக கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருப்புகழ் எனவும் **கி-வ-ஜ அருள் கருத்து வெளியிட்டுள்ளார்**.

நம்முடைய அச்சத்தை விலக்கி கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருப்புகழ் ஓதி. 2026 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் காண்போம். அந்த, அந்த ஊர் மக்கள் ஊர் ஆலயங்களில் திருவிழா தரிசிக்கும் மக்களே யன்றியும் விலங்கு, பறவை முதலிய ஏனைய **உயிரினங்களும் திருவிழா இத் திக்கைகளால் அருள் பெறுகின்றன என ஆகமங்கள் கூறுகின்றன.**

**"துணிந்தவர் ஈசன் துறக்கமது"** - **திருமந்திரம்**

அந்த அந்த ஆலயங்களில் புணரத்தானம் நிறைவாக ஓதுவோம், **கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, முருகன் திருப்புகழ், திருமுறைகள் ஓதுவோம். ஆலயத்திருப்பணி வேலைகளை முருகன் திருவருளுடன் சிறப்பாக நடைபெற அடியார்கள் ஒன்று இணைந்து, ஒத்துழைத்து அருள்மிகு திக்கரை முருகன் திருவருள் பெறுவோம்.**

**சலங்காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார்;**
**யமன் சண்டைக்கு அஞ்சார்**
**துலங்கா நரகக்குழி அணுகார்;**
**துட்ட நோய் அணுகார்**
**கலங்கார் புலிக்கும் கரடிக்கும்**
**யானைக்கும் கந்தன் நன்னூல்**
**அலங்காரம் நூற்றுள் ஒரு கவி**
**தான் கற்றறிந்தவரே.** -101-

கந்தர் அலங்காரத்தில் ஒரு கவியையாவது கற்றுணர்ந்தவர்கள், எதைக்குறித்தும், யாரைக்குறித்தும், மற்றவர்களுக்கும் அஞ்சார். அத்துடன் பிறருக்கு அச்சத்தை உண்டாக்கும் எதுவும் **முருகனுடைய அடியார்களுக்கு அச்சம் விளைவிக்க முடியாது** எனவும், நமது அச்சத்தைப் போக்குவதாகிய பயனைத்தரும் இப்பாடல் அமைந்துள்ளது.

இப்படிச் சொல்வதற்கு **அருணகிரியாருடைய உள்ளத்தில் எத்தனை உறுதிப்பாடு இருக்க வேண்டும்.** முருகன் நிச்சயமாக அருள் செய்வான் என்ற துணிவில் எழுந்த பாடல் இது. **நமக்கும் அந்தத் துணிவு வர வேண்டும்.**

**" துணிந்தவர் ஈசன் துற்கமது ஆள்வார்"** -
திருமந்திரம்

**கொடுங்கோல் மன்னர்களும் அஞ்சா**
**யமன் மரண கால துன்புறத்தனுக்கும் அஞ்சா**
**தீர்வதற்குரிய கொடிய நோயை அணுகார்**

தினம், தினம் கந்தர் அலங்காரம் ஒரு அலங்காரம் பாடலாவது ஓதுவோம்! திக்கரை முருகன் ஆலயம் கும்பாபிஷேகம் கண்டு அடுத்த அலங்காரத்திருவிழா 2026 இல் காண்போம்.

சித்தர் - சிவவாக்கியர் பாடல்கள் புரட்சிகரமான சிந்தனைகள் பல நிறைந்துள்ளன. (சிறுதுளி) பாடல் 336, 407, 517, 457

**சத்தியாவது உன்னுடல் தயங்கு சீவன் உட்சிவம்**
**பித்தர்காள் இதற்குமேல் பிதற்றுகின்றது இல்லையே**
**சுத்தி ஐந்துகூடம் ஒன்று சொல்லிறந்நதோர் வெளி**
**சத்தி சிவமும் ஆகி நின்று தண்மையாவது**
**உண்மையே**

**அகாரமானது அம்பலம் அனாதியானது அம்பலம்**
**உகாரமானது அம்பலம் உண்மையானது அம்பலம்**
**மகாரமானது அம்பலம் வடிவமானது அம்பலம்**
**சிகாரமானது அம்பலம் தெளிந்ததே சிவாயமே.**

அகாரமானது + உகரமானது + மகாரமானது =ஓம்
சிவம் + உமை + ஆன்மா = ஓம்

சிகாரமானது-சிவம்-முருகா! =ஓம் திக்கரை முருகா

**ஆசைகொண்டு அனுதினமும் அன்னியர்**
**பொருளினை**
**மோசம் செய்து அபகரிக்க முற்றிலும் அலைபவர்**
**பூசையோடு நேமநிட்டை பூரிக்கச் செய் பாதகர்**
**காசினியில் ஏழுநரகைக்காத்திருப்பது உண்மையே.**

கும்பிடும் கருத்துளே குகனை ஐங்கரனையும்
நம்பியே இடம் வலம் நமஸ்கரித்து நாடிட
எம்பிரானும் அம்மையும் இருத்தியே நடுவணைத்
தும்பிபோல வாசகம் தொடர்ந்து சோம்பி நீங்குமே

**குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம் -**
(ஏறு மயிலேறி-திருப்புகழில் **4** ஆவது வரி)
மாயாஜாலங்கள் காட்டி மயங்கி முயற்சித்த கிரௌஞ்ச மலையைப் பிளந்து அழித்த **திருக் கோலம்;** தீமையை விரட்டுவதற்குத் **திட்டமிட்டு செயல் படுத்திய அருட்கோலம்.** மயக்கமும் கலக்கமும் அண்டாமல் இருக்கவேண்டும் என்று இறைஞ்சுகின்ற இன்னியல்போடு, **வேலேந்திய வேலனாக அந்த வெற்றிநாதனை தண்டனிடுவோருக்கு தெளிவும் திறனும் தந்து அருள்புரிவார்.**

**உள்ளிருந்து நெஞ்சே ! உலவுஞ் சிவகுருவை**
**வெள்ளெருக்கின் பூச்சூடும் வேணியனை- உள்ளே**
**மனமுருகிப்பார்த்தால்மலைசிலையாகிச் சென்றால்**
**உனதறிவால் பார்த்து நீ ஓது** (பட்டினத்தான் ஞானம்)

நம் முன்னோரது ஆலயங்களைப் போற்றி பழைய ஆதாரங்களைப் பாதுகாத்து தமிழால் வைதாரையும் வாழவைக்கும் தமிழ் கடவுளை திருப்புகழால் துதிப்போம் கந்தர் அலங்காரம் கந்தர் அநுபூதி ஓதி திருவருள் பெறுவோம்

**க.கு.க சிவபாலன்,** K.K.K
**அடியார்க்கு அடியவன்**
**பாஞ்சசன்னியம்**



(சி-3232)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3328

### ஜெனோத்

அவசர அவசரமாக வேலைக்கு செல்லும் போது கொதிக்க கொதிக்க டீ கொண்டு வரும் மனைவிகள் தான்...



வீட்டில் ரிலாக்ஸா இருக்கும் போது ஆறிப்போன டீயை கொடுப்பார்கள்

### டிலான்

நீ மனுசனா மிருகமா என்று கேட்டால் கோவப்படுகிற ஆளுங்க.. நீ சிங்கம் டா, புலி டா என்று சொன்னால் சந்தோசப் படுறாங்கள்...



அதெல்லாம் மிருக கேட்டகரில வராது போல

### விஜய்

கருப்பாயி: பியூட்டி பார்லர் பியூட்டி பார்லர் என்று சொல்லிக்கொண்டு இந்தப் பொண்ணுங்கள் போகுதே அது என்ன என்று கொஞ்சம் சொல்லேன்.



சுப்பம்மா: அதுவா வீட்டில இருக்கிற பழைய பித்தளை சாமான்களுக்கு ஈயம் பூசுவோம் தானே அது மாதிரியான கடை தானாம் அது.

### தனுசா




### சாருஜா

சேர்ந்தே இருப்பது?
நானும் பிரச்சினையும்...



சேராமல் இருப்பது?
நானும் நிம்மதியும்...

### சியானா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை...

யின்றி ஏகமனதாகத் தெரிவானார்.

வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவ நந்தினி பாபு தலைமையில் இடம்பெற்றது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 20 ஆசனங்களைக் கொண்ட வேலணைப் பிரதேச சபையில் இம்முறை தேர்தல் ஆசன விசேட பகிர்வின் மூலம் 2 ஆசனங்கள் கூடுதலாக வழங்கப்பட்டதன் அடிப்படையில் 22 உறுப்பினர்கள் உள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 8 ஆசனங்களையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 3 ஆசனங்களையும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் 2 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 4 ஆசனங்களையும் தமிழ் மக்கள் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மூன்று சுயேட்சைக் குழுக்கள் தலா ஒவ்வொரு ஆசனத்தையும் பெற்றிருந்தன.

தவிசாளர் பதவிக்கு தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சிவலிங்கம் அசோக்குமார் முன்மொழியப்பட்ட நிலையில் வேறு நபர்களின் பெயர்கள் முன்மொழியப்படாததால் அவர் போட்டியின்றித் தெரிவானார். அதனைத் தொடர்ந்து உப தவிசாளராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கண பதிப்பிள்ளை வசந்தகுமாரன் தெரிவானார்.

அதேவேளை சுயேட்சைக் குழுவின் உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் தவிசாளர் தெரிவின்போது வெளிநடப்புச் செய்திருந்தார். (ம-7,33)

## வலிகாமம்...

மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் 8 பேரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் 5 பேரும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் 4 பேரும் தேசிய மக்கள் சக்தி சார்பில் 6 பேரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் 2 பேரும் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஒருவரும் தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் 2 பேரும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிலையில் தவிசாளர் தெரிவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் கந்தையா யசீதனின் பெயரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் நாகராசா பகீரதனுடைய பெயர்களும் முன்மொழியப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட பகிரங்க வாக்கெடுப்பில் கந்தையா யசீதனுக்கு தமிழ் மக்கள் கூட்டணி, ஈபிடிபி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழரசுக் கட்சியின் 13 வாக்குகளைப் பெற்று தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாகராசா பகீரதனுக்கு 9 வாக்குகள் அளிக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி 6 வாக்குகளைக் கொண்டிருந்த பொழுதிலும் நடுநிலை வகித்தது.

இதேவேளை உப தவிசாளராக பேரின்பநாயகம் சுபாகரின் பெயர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பிலும் மற்றும் தர்மகுலசிங்கம் உதயகுமாரின் பெயர் சங்கு-சைக்கிள் கூட்டணியின் சார்பில் முன்மொழியப்பட்டது.

இந்நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேரின்பநாயகம் சுபாகர் உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். (ம-7,33,104)

## ஊர்காவற்றுறை...

தேசிய மக்கள் முன்னணி. அதன் தவிசாளராக அன்னலிங்கம் அன்னராசா தெரிவானார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு நேற்று (20) காலை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

13 உறுப்பினர்களைக் கொண்ட ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் 4 உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி சார்பில் தலா 3 உறுப்பினர்களும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் 2 உறுப்பினர்களும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் ஒரு உறுப்பினரும் நடந்து முடிந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இதன்போது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த அன்னலிங்கம் அன்னராசாவும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் யுகந்தனும் முன்மொழியப்பட்டனர்.

அன்னலிங்கம் அன்னராசாவுக்கு ஆதரவாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த தலா ஒரு உறுப்பினர் என மொத்தமாக 5 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

அத்தோடு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் யுகந்தனுக்கு ஆதரவாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் என மொத்தமாக 5 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

சமமாக வாக்குக் கிடைத்த நிலையில் திருவுளச்சீட்டு மூலம் அன்னலிங்கம் அன்னராசா தவிசாளராகத் தெரிவானார்.

தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும் வாக்களிப்பில் கலந்து கொள்ளாது நடுநிலையாகச் செயற்பட்டனர்.

தொடர்ந்து இடம்பெற்ற பிரதித் தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை லெனின் ரஞ்சித் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (ம-7,33)

## ஊர்காவற்றுறையை...

ஊர்காவற்றுறை பிரதேச சபையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆட்சி செய்து வந்த நிலையில் அந்த வரலாறு தற்போது மாறியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியதையடுத்து தற்போது அந்த வரலாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## யாழ்ப்பாண...

சரவை அனுமதியின் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் நேற்று அமைச்சரவைச் செயலாளர் W.M.D.J.பெர்னாண்டோவால் அமைச்சரவை அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

மருதலிங்கம் பிரதீபன் 2024 மார்ச் 9ஆம் திகதி முதல் யாழ்ப்பாண மாவட்டத்தின் பதில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)


மஹஜன சம்பத — திகதி 2025.06.20 — சீட்டிழுப்பு இலக்கம் 5866 — Q 3 6 4 5 7 2 — அத சம்பத — Q 4 5 7 2 — சீட்டிழுப்பு இலக்கம் 441 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2025.06.20 — சீட்டிழுப்பு இலக்கம் - 1896 — O 19 39 43 53 O — Double Chance 73085

மெகா பவர் — திகதி 20/06/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2214 — C 19 12 45 51 53

ஜய — NLB — திகதி 2025.06.20 — சீட்டிழுப்பு இலக்கம் 0134 — B 4 2 4 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4108 — சீட்டிழுப்பு திகதி 20.06.2025 — P 48 60 68 80 — P — தேசிய லொத்தர் சபை

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.06.20 — சீட்டிழுப்பு இலக்கம் 1175 — கன்னி 09 17 42 44 கன்னி — 42717 — 14

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பிரி தன சம்பத — 20.06.2025 — வெற்றி வாரம் 574 — J 9 6 0 5 2 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,584,096.80 — 86659 — DLB — வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2840 — சீட்டிழுப்பு திகதி 2025.06.20 — தினம் வெள்ளிக்கிழமை — 28 41 61 74 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,584,649.60 — DLB

சனிதா — திகதி 20.06.2025 — வெற்றி வாரம் 5001 — 10 69 73 78 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,591,780.40 — செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 50,000/- 60754 — DLB — வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி — வெற்றி வாரம் 708 — 20.06.2025 — வெள்ளிக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 20 35 47 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4552 — சீட்டிழுப்பு திகதி 20.06.2025 — தினம் வெள்ளிக்கிழமை — 08 31 33 35 — மேடம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,789,016.00 — 125971 — DLB


கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — B 34 07 22 37 62 — 2016 — 20.06.2025 வெள்ளிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.578,800,981.80 — DLB — வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி — ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2666 — சீட்டிழுப்பு திகதி 2025.06.20 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,546,982.40 — 24 33 39 74 N — ரூ.100,000/- 984269 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட தச்சுவேலை மெசின் (Wood working Machine) "Lida" ஒரிஜினல் 12" மற்றும் 10" Sliding இணைப்புடன் இப்பொழுது எம்மிடம். இதை ஒத்த போலிகள் தரம் குறைந்த மோட்டாருடன் சந்தையில் ஏமாந்து விடாதீர்.



V2 "நாங்கள் உங்களோடு"

**ஆர்க் . என் . கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

(4596)

Hotline: 071 535 7799 / 071 535 7803

## நயினை அம்மன் Real Estate

யாழ்ப்பாணம், கொழும்பு, நயினாதீவு, வேலணை போன்ற இடங்களில் காணி, வீடு விற்க, வாங்க உள்ளவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

076 311 9485
076 050 3863

(1248)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## வேலைவாய்ப்பு

உரும்பிராயில் அமைந்துள்ள சூப்பர்மார்க்கட் ஒன்றிற்கு பெண் பணியாளர்கள் வேலைக்குத் தேவை.

வயதெல்லை : 20 - 30 வரை

நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்

076 422 1761

(1247)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் மல்லாகத்தில் இயங்கிவரும் நிறுவனத்திற்கு
லேத் வேலை தெரிந்தவர்கள் தேவை.
வெல்டிங் வேலை தெரிந்தவர் தேவை.

075 737 8191
021 224 5057

(4576)

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

- 5-9 Kg 3970/-
- 11-16 Kg 2800/-
- 21-30 Kg 2640/-

✓ குறைந்த விலை -நிறைந்த சேவை
✓ கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
✓ 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 / 076 822 6237

(C-3236)

## காணி வீடு விற்பனைக்குண்டு

யாழ். அளவெட்டி பெரிய சங்கத்தானை சந்தியில் இருந்து 100m தூரத்திலும் A.M.A கல்வி நிலையத்தில் இருந்து 50m தூரத்திலும் நல்ல நீர்க் கிணறு, வருமானங்களும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. குடியிருப்புச் சூழல்.
காணியின் பரப்பு - 5 பரப்பு

தொடர்புகளுக்கு:
076 755 8606
077 861 5247

(4563)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 218/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 254/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 399/= | |
| 1Kg நவை | - 290/= | |
| 1Kg வெள்ளை நாடு அரிசி | - 230/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் பச்சை | - 215/= | |
| 1Kg தீட்டல்பச்சை | - 240/= | |
| 10Kg விஜிதா | - 2800/= | |
| 1Kg மல்லி (M) | - 355/= | |
| 1Kg உளுத்தம்பருப்பு | - 759/= | |
| 1Kg சம்பா அரிசி | - 238/= | |
| 1Kg கடலை | - 385/= | |
| 1Kg சோயா | - 350/= | |
| 01 பெல்வத்த யோக்கட் | - 42/= | ~~70/=~~ |

400g Anchor



1040/= ~~1100/=~~

1Kg சவர்க்கார பவுடர்



270/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(1247)

Happy Supermarket 0777 8080 30



## புதுக்குடியிருப்பு கோம்பாவில் அருள்மிகு நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா விஞ்ஞாபனம் - 2025

புதுக்குடியிருப்பு கோம்பாவில் அருள்மிகு நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 23.06.2025 திங்கட்கிழமை வழமைபோன்று வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது. நாகதம்பிரான் அடியவர்கள் அனைவரும் வருகைதந்து நாகதம்பிரானின் பேரருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

### விசேட அறிவித்தல்

- வியாபாரம் செய்யவிரும்பும் வியாபாரிகள் மற்றும் நேர்த்திக்கடன் செய்ய விரும்புவோர் ஆலய பரிபாலன சபையினருடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(C-3231)

**அனைவரும் வருக நாகதம்பிரானின் அருளைப் பெறுக**

தொ.பே.இல.: 077 346 7242, 077 744 5951, 076 141 8196

ஆலய பரிபாலன சபை




(4579)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்... அவர்களது அச்சகத்தில் 21.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org